MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR MADRAS-41.
11340.

உ
கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீமத்தியார்ச்சுன மான்மியம்.

# ஸ்ரீஏகநாயகருசல்.

# ஸ்ரீஏகநாயகர் தாலாட்டு.

---

இவை.

திருக்கைலாய பரம்பரைத்
திருவாவடுதுறை யாதீனத்து
ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக சுவாமிகள்
ஷை ஆதீன வித்வான்
மீனாட்சிசுந்தரம்பிள்ளை யவர்கள்
மாணாக்கராகிய
கும்பகோணம் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்
வே. சாமிநாதையரால்
ஷை ஆதீனத்துக்காறுபாறு
சுப்பிரமணிய சுவாமிகளுத்தரவின்படி
செய்யப்பட்டு,

சென்னை:
ஜீவரக்ஷாமிர்த அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டன.

1885. பார்த்திபவரு வைகாசிமீ.

சிவமயம்.

திரிசிரபுரம் வித்வான்

சி. தியாகராஜ செட்டியாரவர்களியற்றிய

## சிறப்புப்பாயிரம்.

மன்னுமருட் பரமனிடை மருதமான் மியந்தமிழின்
வயங்கி யோங்க
நன்னடையில் வரைந்தனையன் றாலாட்டுத் திருவூச
னயக்கச் செய்தான்
சொன்னடையும் பொருணடையு நன்குணர்ந்த பெரும்புலவன்
றூயோர் வேண்டு
மெந்நடையு மியல்பினுணர் சாமிநாதப்பெயர் கொளியல்
வல்லோனே.

உ

சிவமயம்.

பட்டணத்துப்பிள்ளையார் அருளிச்செய்த

# திருவிடைமருதூர்

# மும்மணிக்கோவை.

---

## நேரிசையாசிரியப்பா.

கொண்டலி னிருண்ட கண்டத் தெண்டோட்
செவ்வா னுருவிற் பையர வார்த்துச்
சிறுபிறை கிடந்த நெறிதரு புன்சடை
மூவா முதல்வ முக்கட் செல்வ
தேவ தேவ திருவிடை மருத
மாசறு சிறப்பின் வானவ ராடும்
பூசத் தீர்த்தம் புரக்கும் பொன்னி
யயிரா வணத்துறை யாடு மப்ப
கைலாய வாண கௌரி நாயக
நின்னை வணங்கிப் பொன்னடி புகழ்ந்து
பெரும்பதம் பிழையா வரம்பல பெற்றோ
ரிமையா நெடுங்க ணுமையா ணங்கையு
மழைக்கட் கடத்துப் புழைக்கைப் பிள்ளையு
மமரர்த் தாங்குங் குமர வேளுஞ்
சுரிசங் கேந்திய திருநெடு மாலும்
வரன்முறை படைத்த நான்முகத் தொருவனுந்
தாருகற் செற்ற வீரக் கன்னியும்

நாவின் கிழத்தியும் பூவின் மடந்தையும்
பீடுயர் தோற்றத்துக் கோடியுருத் திரரு
மானப் பெருந்திறல் வானோர் தலைவனுஞ்
செயிர்தீர் நாற்கோட் டயிரா வதமும்
வாம்பரி யருக்கர் தாம்பன் னிருவருஞ்
சந்திர னொருவனுஞ் செந்தீக் கடவுளு
நிருதியுஞ் சமனுஞ் சுருதிக ணான்கும்
வருணனும் வாயுவு மிருநிதிக் கிழவனு
மெட்டு நாகமு மட்ட வசுக்களு
மூன்று கோடி யான்ற முனிவரும்
வசிட்டனுங் கபிலனு மகத்தியன் றானுந்
தும்புரு நாரத ரென்றிரு திறத்தரும்
வித்தகப் பாடன் முத்திறத் தடியருந்
திருந்திய வன்பிற் பெருந்துறைப் பிள்ளையு
மத்தகு செல்வத் தவமதித் தருளிய
சித்த மார்சிவ வாக்கிய தேவரும்
வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளன் கையிற் கட்டவிழ்ப் பித்து
மோடும் பன்னரி யூளைகேட் டரனைப்
பாடின வென்று படாம்பல வளித்துங்
குவளைப் புனலிற் றவளை யரற்ற
வீசன் றன்னை யேத்தின வென்று
காசும் பொன்னுங் கலந்து தூவியும்
வழிபடு மொருவன் மஞ்சனத் தியற்றிய
செழுவிதை யெள்ளைத் தின்னக் கண்டு
பிடித்தலு மவனிப் பிறப்புக் கென்ன
விடித்துக் கொண்டவ னெச்சிலை நுகர்ந்து

உ

கணபதிதுணை.

# மத்தியார்ச்சுன மான்மியம்.

## விநாயகவணக்கம்.

உலகமுண்ணர்ந் திடுகருணை யதனொடுநெஞ் சகமதினீ டுவகை ய்தி, யலகில்புக ழுறுகவிகை நிழறனின்மெய் யன்பர்குல மதனை ாக்கக், குலவுமுப நிடதவரி யணைமீது பரசெழிற்செங் கோல்கைக் காண்டாங், கிலகுமிடை மருதாண்ட விநாயகனை யெப்பொழுது றைஞ்சி வாழ்வாம்.

நைமிசவனத்திலே, சௌனகாதிமுனிவர்கள் பௌராணிகோர் தமராகிய சூதமுனிவரைவணங்கி, “ஸ்வாமீ! அடியேங்களுய்யும் ண்ணம் எல்லாவிசேஷங்களு மமைந்த சிவஸ்தலமொன்றை நவி றருள்க” என்று பிரார்த்திக்க; அவர் நெடுநேரஞ் சமாதிபொ ந்தி, பின்பு நெஞ்ச நெக்குருக, கண்ணீர்வார, மெய்ம்மயிர்சிலிர் ப, ஸ்ரீ ஜோதின்மய மகாலிங்க மூர்த்தியையும், ஸ்ரீ பிருகத் சுந் தருசாம்பிகையையும், தமதாசாரியராகிய வியாச முனிவரையுந் யானித்து, ஸ்தோத்திரஞ்செய்து, இந்த ஸ்தலமகிமையை யரு ச்செய்வாராயினர்.

உ

திருச்சிற்றம்பலம்.

# ஸ்தலமகிமை.

இலங்குமந் திரங்க டம்மி லிசைக்குமஞ் செழுத்து நீ
நலந்தரு நூல்க டம்மி னவின்றிடு மறையு மெண்ணும்
பலன்றரு தேவர் தம்மிற் பரமனு மதிக மென்னத்
தலங்களி லதிக மாகுந் தனியிடை மருது மன்னே.

அகண்டாகார நித்த வியாபக சச்சிதாநந்தப்பிழம்பாகிய சி
பெருமான், தம்மை ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும் பொருட்
அநேக ஸ்தலங்களைப் படைத்தருளினர். அவற்றுள், ஸ்ரீ அரு
சலம், ஸ்ரீ காசி, திருக்காளத்தி, திருக்கேதாரம், திருவாரூர், தி
வலஞ்சுழி, திருவேரகம், ஸ்ரீ சிதம்பரம், திருவெண்காடு, ஸ்ரீ கும்
கோணம், ஸ்ரீ மத்தியார்ச்சுனம் என்னும் பதினொரு ஸ்தலங்க
சிறந்தன. அவைகளுள்ளே, அநாதியாக இருத்தலானும், எல்லாவுய
களுமொடுங்கிய மஹாராத்திரியில் அவ்வுயிர்களை யெழுப்புதற்பெ
ருட்டு ஏகாதச ருத்திரர்கள் வந்து வழிபட்டு, சிவாநுக்கிரகம் பெ
றும்படி விளங்கினமையானும், திருவலஞ்சுழி முதலிய அதிப்பிரப
ஸ்தலங்களை விநாயகர் முதலிய பரிவார தேவதாஸ்தலங்களாக
கொண் டிருத்தலானும், மத்தியார்ச்சுனமே சிறந்தது. திரு
லஞ்சுழி விநாயகக்கடவுளுக்கும், சுவாமிமலை சுப்பிரமணியப்பெ
ருமானுக்கும், திருவாப்பாடி சண்டேசுரநாயனாருக்கும், சூரியனு
கோயில் சூரியன் முதலிய நவக்கிரகங்களுக்கும், சிதம்பரம் நடே
சப்பெருமானுக்கும், சீகாழி பைரவக்கடவுளுக்கும், திருவாவ
துறை விர்ஷபதேவருக்கும், திருவாரூர் ஸோமாஸ்கந்தருக்கும், தி
வாலங்குடி தக்ஷிணமூர்த்திக்கும் வாசஸ்தானங்களாம்.

மத்தியம்-நடு. அர்ச்சனம்-நின்மலம். இது நின்மலமானஸ்தான மெனப்பொருள்பட்டு, மத்தியசப்தத்தோடுசேர்ந்துநின்று, இத்தன்மையையுடைய (ஆதிசக்தியின் ஹிர்தயகமல) மத்தியஸ்தானத்தையுணர்த்தி, பின்பு அந்த ஹிர்தயகமலமத்தியில் தியானிக்கப்பட்டு விளங்கிய ஸ்ரீ ஜோதின்மயமகாலிங்கப்பெருமான், முனிவர்களுக்குக் காட்சியளித்தற்பொருட்டு இங்கே எழுந்தருளியிருக்கின்றமையால், அப்பெயர் இந்த க்ஷேத்திரத்திற்கும் வந்தது. அல்லாமல் பின்பொருகாலத்துத் தரிசித்தற்குவந்த உரோமசமகாமுனிவர், அர்ச்சுனவனத்தின் மத்தியில் சிவலிங்கப்பெருமா னெழுந்தருளியிருப்பக் கண்டு, "இந்த க்ஷேத்திரம் மத்தியார்ச்சுன" மென்று வழங்கியபடி கொள்வதும் பொருந்தும். இன்னும் இது தமக்கு ஆதிசக்திகாட்சி கொடுத்தற்குமுனிவர்களுண்டாக்கின சண்பகச்சோலையையுடைமையால் சண்பகவனமென்றும், ஆதிசக்தி யெழுந்தருளியிருத்தலாற் சக்திபுரமென்றும், சக்தியும் முனிவர்களுந் தவஞ்செய்து பேறுபெற்றமையால் தபோவனமென்றும், சிவபெருமான் ஜோதிவடிவாய் அவர்களுக்குக் காட்சி கொடுத்தருளினமையால் ஜோதிநகரமென்றும், எல்லாப் புண்ணிய தீர்த்தங்களையுமுடைமையாற் சர்வதீர்த்தபுரமென்றும், வில்வவனத்தையுடைமையால் வில்வவனமென்றும், தன்னிடத்திலிருந்து செய்யப்படும் ஒவ்வொரு புண்ணியமும் பற்பலவாக விருத்தியாதலால் தருமவிர்த்திபுரமென்றும், பூமியின்கண் சிவலோகமாக இருத்தலாற் பூலோக சிவலோகமென்றும், வீரசோழன் வழிபட்டு, ஆலயத்திருப்பணிசெய்து, காடுவெட்டி, நகரமுண்டாக்கி, நித்தியநைமித்திகங்களை விதிப்படி புரிவித்தமையால் வீரசோழ நகரமென்றுஞ் சொல்லப்படும். இந்த க்ஷேத்திரமகிமை, ஸ்காந்தபுராணத்திலும், லிங்கபுராணத்திலும், பிரமகைவர்த்தத்திலும், சிவரகஸ்யாதிகளிலும் விரிவாகக்கூறப்பட்டுள்ளது,

## மருதவிர்க்ஷத்தின் வரலாறும், சிவபெருமான் காட்சிகொடுத்தருளிய முறையும்.

திருக்கைலாஸ மலையிலே, ஒப்புயர்வில்லாத செம்பொற்றிருக்கோயிலிலே, அநந்தகோடிசூரியர் உதித்தாற்போன்ற காந்தியையுடையரத்நசிங்காதனத்தின்மேலே, எழுந்தருளியிருந்து, மகாதேவர், தமது ஞானசக்தியாகியஉமாதேவியாருக்குஆகமங்களையுபதேசித்தருளினர். உமாதேவியார் அவற்றையெல்லாந்திருவுளங்கொண்டு, மகிழ்ந்து, எழுந்துவணங்கி, "எம்பெருமானே! இவ்வுலகவளங்களையும், ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும்படிதேவரீர் எழுந்தருளியிருக்கும் ஸ்தலங்களையும், அவற்றுள் சிறந்ததாகிய வொன்றனையும், காட்டியருளல்வேண்டும்" என்று பிரார்த்திக்க; "நின்குறிப்பு மிகவுமழகிது" என்று மகிழ்வுற்று, சிவபிரான், அவ்வுமாதேவியாரோடும் விர்ஷபாரூடராய்த் திருக்கைலாசத்தினின்று மெழுந்தருளி, எல்லா விசேஷங்களையுங் காண்பித்துக்கொண்டுவந்து, காவேரிமாநதியையடைந்து, அதன்மகிமைகளை யெடுத்துரைத்து, அதன் தக்ஷிணதீரமாகிய இந்த க்ஷேத்திரத்திற்கு நேராக ஆகாசத்தில் எழுந்தருளுகையில்; கைலையங்கிரியானது தமதுபிரிவாற்றுமையால் மிகவும் உன்னதமான மருதவிர்க்ஷமாகி, அவ்விடத்தே நிற்கக்கண்டு, அதனிழலில் விர்ஷபத்தை நிறுத்தி, உமாதேவியாரை நோக்கி, "ப்ரியே! இந்த ஸ்தலம் அநாதியேயுள்ளது, நமக்கு அதிகப்பிரீதியை யுண்டுபண்ணுவது; இதற்குச் சமானமாகிய ஸ்தலம் எங்குமில்லை. இதன் அழகை நீகாண்பாயாக" என்று திருவாய்மலர்ந்தருள; உமாதேவியார், ஆங்காங்குள்ள தபோவனங்களையும், அவ்வனங்களில் காசிபர்முதலிய முனிவர்கள் தவஞ்செய்தலையும் மற்றைவிசேஷங்களையும்

நோக்கி அன்புற்று, ஆநந்தப் பெருக்கமடைந்தனர். அப்பொழுது அவ்வுமாதேவியாருடைய திருவிழிகள் கருணைவெள்ளம் பொழிந்தன. அவ்வெள்ளம் கிழக்கேசென்று, காருண்யாமிர்தம் எனப் பெயர்பெற்று, ஒருதீர்த்தமாய் விளங்கியது. அக்காலத்தில் சிவபிரானது திருவிழிகளும் கருணைவெள்ளம் பொழிந்தன. அவ்வெள்ளம் இரண்டுபிரிவாகி, பொன்னிறமுற்றுச்சென்று, நீர்வற்றிக்கிடந்த வாயுதிக்கிலுள்ள தடாகத்திலும் தென்றிசையிலுள்ள தடாகத்திலும் பாய்ந்தது. அவ்விரண்டனுள், வாயுதிக்கிலுள்ள தடாகத்திலே, உயிர்போயுலர்ந்துகிடந்த ஜலசரங்கள்யாவும் உயிர்பெற்று, ருத்ரகணங்களாகி ஸ்வாமியை வலஞ்செய்து, வாழ்த்தி, வணங்கி, விமானத்தின்மீதேறிச் சிவபுரமடைந்தன. அப்பால் பார்வதிதேவியாரோடு சுவாமி, அங்கே தவஞ்செய்யுமுனிவர்கள், தம்முட்பேசிக்கொள்ளும் வினவிடைகளைத் தெரிந்துகொள்ளும்பொருட்டு, ஒருமுகூர்த்தகாலம் அவர்களுக்குத் தோன்றாதவண்ணம் எழுந்தருளியிருக்கையில்; அங்கே ஸ்ரீஅகஸ்தியமுனிவர் எழுந்தருளினர். முனிவர்கள் அவரைக்கண்டு, பேரானந்தமுற்று, எதிர்சென்று வணங்கி, "தேவரீர் இங்கே எழுந்தருளியது அடியேங்கள்செய்த தவப்பேறேயன்றி வேறன்று; ஆதலால் யாங்கள் உச்சீவித்தேம்; யாகமுதலிய கருமங்களைச்செய்யிற் பயனளிப்பது அக்கருமமோ? அன்றியளிப்பவர் சிவபெருமானோ? என்னுஞ் சந்தேகம் எமக்குநெடுநாளாகவுள்ளது; இதனை நிவிர்த்திசெய்தருளல்வேண்டும்" என்று பிரார்த்திக்க; அகஸ்தியமுனிவர், கன்மம் தானே பயன்றராதென்றும், தருபவர் சிவபெருமானேயென்றும், அவரைப்பக்திநெறியாலேயே அடையவேண்டுமென்றும், அந்தப்பக்திநெறி பெருந்தவத்தா லெய்தற்பாலதென்றும், பற்பலநியாயங்களால் நிரூபித்து, "முனிவர்காள்! அவன

ருளாலே அவனை யடையவேண்டுமென்று வேதாகமங்கள் கூறுதலால், நீவிர் அருளாகிய உமாதேவியாரைக் குறித்துத் தவஞ்செய்து, அவராற் [சிவபெருமானை அடையுங்கள்" என்று கூறியருளினர். அப்பொழுது உமாதேவியார், "இவர்களுக்குக்காட்சிகொடுத்தருளல் வேண்டும்" என்று பிரார்த்திக்க, "சிவபெருமான் நாம் இப்பொழுது இவர்களுக்கு வெளிப்படுவது முறையன்று; அகஸ்தியமுனிவன் மொழிப்படியாகுக" என்று கூறி, உமாதேவியாரோடுங் கைலையங்கிரிக்கு எழுந்தருளினுர்.

பின்பு அகஸ்தியமுனிவர் கட்டளையின்படி எல்லாமுனிவர்களும் அவரோடுகூடி, ஸரஸ்வதி தேவியைக்குறித்துத் தவஞ்செய்து, வேதாகமங்களி னுண்மைப் பொருளையறிந்து, பின்பு லக்ஷ்மிதேவியைக் குறித்துத் தவஞ்செய்து, சிவாராதனத்திற்கு வேண்டிய பாக்கியத்தை யடைந்து, பின்பு சிவபெருமானைத் தமக்குப் பிரத்தியக்ஷமாகத் தரிசிப்பித்தற்குச் சிற்சக்தியான ஆதிசக்தியின் அருள்பெற வேண்டி, அந்தச் சக்திக்குப் பிரியமான சண்பகச்சோலையொன்றை உண்டாக்கி, அந்தச்சோலையில் ப்ரத்தியக்ஷமாக வேண்டுமென்று தவஞ்செய்துகொண் டிருக்கையில்; அம்பிகை, பரமசிவனிடத்துப் பிரியாவிடைபெற்று எழுந்தருளிக் காட்சிகொடுக்க ; முனிவர்கள் தரிசித்து ஆனந்தபரவசர்களாய்த் "தாயே! நாங்கள் சிவபெருமானையுந் தரிசிக்கும்படி திருவுளங்கொண்டருளவேண்டும்" என்று பிரார்த்தித்தனர். அப்பொழுது பார்வதிதேவியார், தமது ஹிர்தயகமலமத்தியில் சிவபெருமானைத்தியானித்து, மௌனமாய்ச்சிவயோகஞ்செய்தனர். முனிவர்கள், அம்பிகைக்குக் கைங்கரியஞ்செய்துகொண்டு தவம்புரிந் திருந்தனர்.

இப்படி நிகழுங்காலத்தில், அம்பிகையின்ஹிர்தயகமலமத்தியில் தியானிக்கப்பட்டபடியே சிவபெருமான், ஜோதின்மய மகாலிங்கமூர்த்தியாய் அவர்களுக்குக் காட்சிகொடுத்தருளினுர். முனிவர்கள்

யாவரும் தரிசிக்க வாற்ருதுதிகைத்து, உமாதேவியாருடைய திரு வருளால் தரிசித்துப் பேரானந்தப் பெருவாழ்வடைந்தார்ள். பின்பு சிவபெருமான், அருள்மயமாகிய அந்தஜோதின்மய மகாலிங்கத்தினின்று பிறைமுடியும், மான் மழு அபயம் வரதம் அமைந்த திருக்கரங்கணுன்கும், தரிசித்தற்கினிய மற்றைய வயவங்களும் விளங்க, ஏகநாயக மூர்த்தியா யெழுந்தருளிக் காட்சிகொடுத்தருளினுர். அப்பொழுது தேவர்கள் மலர்மழைபொழிந்தார்கள். குபேரன் சுவர்ணவர்ஷம் வர்ஷித்தான். கந்தர்வர்கள் இனிமையான கானஞ்செய்தார்கள். பூதகணுதிபர்கள் வாத்தியங்களை முழக்கினுர்கள். இங்ஙனங் காட்சிகொடுத்தருளிய ஏகநாயகரை உமாதேவியார் வணங்கித் துதித்தார். முனிவர்களும் வணங்கி ஸ்தோத்திரஞ்செய்து, “ நாம் செய்ததவம் பலித்தது ” என்று ஆனந்தபரவசர்களாயினர். அப்பொழுது சிவபிரான், பார்வதிதேவியாரை நோக்கி, “ நினது தவங்கண்டு மகிழ்வடைந்தோம்; நினது கருத்தின்படிக்கும், நமதன்பனுகிய அகஸ்தியமுனிவன் முனிவர்களுக்குக் கூறியபடிக்கும், இம்முனிவர்களுக்குக் காட்சிகொடுத்தேம். எம்மோடு அபேதமாகிய உனக்கு, எம்மால் தருதற்குரியது யாது? யாவரும் அறியும்படி நாம்முன்னர் வடிவமாகக்கொண்ட ஜோதின்மய மகாலிங்கத்தை, இந்த க்ஷேத்திரத்தில் அநாதியாகவுள்ள நம்முருவமாகிய லிங்கத்தோடு கலப்பித்துப் பூசிக்கின்றேம்; இதனை ஒருதினம் பூசிப்பவர்கள், இருமைப் பயனையும் எளிதினடைந்து முக்தியின்பத்தையு மடைவார்கள் ” என்றுமொழிந்தருளி, விஷ்ணுமுதலிய தேவர்கள் தத்தமக்கு இயன்ற கைங்கரியங்களை அன்போடுசெய்து பக்கத்தேநிற்ப, தாமுரைத்தருளிய வேதாகமவிதிப்படி அம்மூர்த்தியை அர்ச்சித்து, பின்பு அருகே ஏவல்செய்து நின்ற தேவர்கள் யாவருக்கும் அவரவர் கருதிய வரங்களையருளி, உமாதேவியாரைநோக்கி மந்தஹாஸஞ் செய்

தனர். அப்பொழுது உமாதேவியார் "ஸ்வாமீ! திருமால்முதலிய தேவர்கள், தத்தம் எண்ணம்வாய்ப்பத் தேவரீரைப் பூசிக்கின்றனர். தேவரீர் என்னபயனைக்குறித்துப் பூசித்தீர்" என்ன; "உமையே நம்மைப் பூசிக்கு முறையை இம்முனிவர்க்கு அறிவுறுத்தற்பொருட்டே" என்றுசொல்லி, உமாதேவியாரது வேண்டுகோளின்படி முனிவர்களைநோக்கி, "நீங்கள் வேண்டியவரங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்" என்ன; அவர்கள் "கிர்பாநிதியே! அடியேங்களுக்குச் சிவஞானம் அருளுக" என்றார்கள். சிவபிரான் அப்படியே ஞானோபதேசஞ்செய்து, சிவலிங்கத்தின் பெருமையையும், பூசைசெய்யு முறைமையையும், பூசிப்பவரடையும் பயனையும் விரித்துச்சொல்லியருளினர். அப்பால் தேவர்களும்முனிவர்களும் விசுவகர்மாவை வருவித்து, ஆலய மமைக்கும்படிகூற; அவன் விதிப்படி கர்ப்பக்கிரகமும், அர்த்தமண்டபமுதலிய மண்டபங்களும், திருமாளிகைப் பத்திமுதலியனவும், ஆவரணதேவர்கள் ஆலயங்களும், வலப்பக்கத்தில் பிருகத்சுந்தர குசாம்பிகையினாலயமும், ஒருகணப் பொழுதில் மனத்தால் நிருமித்தனன். அவ்வவ்வாலயங்களில் அந்த அந்தத்தேவரெழுந்தருளியிருப்ப; அவர் விதிப்படி பூசைபுரிந்தின்புற்றனர்.

## உரோமச முனிவரும், வீரசோழனும் வழிபட்டது.

உரோமசரென்னும் முனிசிரேஷ்டர் மருதவனேசரைச் சேவித்தற்பொருட்டு, தமது தபோவனத்தினின்றும் புறப்பட்டு, பலதேசங்களையுங் கடந்து, இந்த ஸ்தலத்தையுடைந்து, இதனது சிறப்பைநோக்கிக்கொண்டுவருங்கால்; திருக்கோயிலின் வாயுதிக்கிலுள்ள தீர்த்தத்தில் ஒரு காகம்வந்துபடிந்து, பொன்னிறமுற்று, மருதவிர்க்ஷத்திலிருந்து, பரமசிவனை ஸ்தோத்ரஞ்செய்வதை ஆச்சரியத்தோடுகண்டு "காகமே! உன்வரலாறு யாது? சொல்" என்றலும்; காகம், "நான்

பூர்வஜன்மத்தில் விப்ரன். வேதசாஸ்திரபுராணங்களையும், விதிநிஷேதங்களையும் நன்றாக அறிந்தவன். ஒருநாள் சூர்யக்ரஹணபுண்யகாலத்தில், பலரும் ஸ்நானம்பண்ணித் தானதர்மாதிகளைச்செய்யும் பொழுது, நானும் சென்று, ஸ்நானம்பண்ணி, செய்யவேண்டுவனவற்றைச்செய்து, ஒரு அரசனிடத்தில் தானம்வாங்கி, ஆசையடங்காமையால் மற்றோரரசனிடத்தும் சென்று வாங்கத்தொடங்கினேன். அவன் எனது மார்பிலுள்ள சந்தனத்தைக்கண்டு, "நீ முன்னமே யாரிடத்தேனுந் தானம்வாங்கியதுண்டோ" என்ன; ஆம். என்றேன். அரசன் கோபித்து, "வீடுகடோறுஞ்சென்று, இரைகவருங்காகம்போலப் பலரிடத்தும் தானம் வாங்கக் கருதினமையாற் காகவடிவமடையக்கடவாய்" எனச்சபித்தான். நானும் அரசனைச் சபிக்க எண்ணுங்கால், அவனது புரோகிதனாகிய சுசங்கியனென்பவன்; என்னைப்பணிந்து, பலவுயிர்களையுங் காக்கின்ற அரசனைச் சபியற்க. அரசன் சபியாவிடினும் நீ காகவடிவமடைதற்குத் தடையில்லை; நீ யடையுங் காகவடிவம் ஒரு புண்யதீர்த்தத்தால் நீங்கும், என்று கூறி, நிரம்பப் பிரார்த்தித்துக்கொண்டமையால், நான் கோபம் நீங்கி, காகவடிவம்பெற்று, பூர்வஞாபகத்தோடும் பலதீர்த்தங்களிலும்படிந்து, முன்னர்த் தவப்பேற்றால், இந்த ஸ்தலத்தையடைந்து, இந்தத் தீர்த்தத்திற்படிந்து, இந்த ஜோதின்மய மகாலிங்கத்தின் கிருபையாற் பொன்வடிவம்பெற்றேன். உம்மையுந் தரிசித்தேன் நற்கதியுமடைவேன். இனி என்ன குறையுடையேன்" என்னும் பொழுதில், சிவகிருபையாற் கோடி சூரியப்பிரகாசமுள்ள விமானமொன்று பல தேவகணங்களோடும்வர, காகம், ருத்திரவடிவமுற்று, அதிலேறி, பலசிறப்புடன் கயிலையங்கிரியிற்சென்று, அளவில்லாத இன்பமுற்றிருந்தது.

இவ்வாறு சென்றதைக்கண்ட உரோமசமகாமுனிவர், மிகவும் ஆச்சரியமுற்று, மருதவனத்தால் மூடப்பட்ட திருக்கோயிலையடை

ந்து, ஸ்வாமியையவணங்கி, அடியேனையும் ஆட்கொண்டருளல்வேண்டுமென்று பிரார்த்தித்து, புறம்பேவந்து, ஒருவரையுங் காணாது திகைப்புற்று, பரமசிவனைப் பிரார்த்தித்து நின்று, அப்பொழுது தமக்குப் பிரசன்னரான திருநந்திதேவரை நமஸ்கரித்து, இத்திருக்கோயிலில் எல்லாச் சிறப்பும அமைந்திருப்ப, மனிதர்மள்மட்டுமில்லாமைக்குக் காரணம் என்ன'' என்று வினவினர். அப்பொழுது திருநந்திதேவர், முன்னம் இங்கிருந்து சிவாராதனம் செய்துவந்த அகஸ்தியமுனிவர் முதலாயினோர், சிவாஞ்ஞையால் சுவேதாரண்யத்தையடைந்து, அங்குள்ள முனிவர்களோடு யாகஞ்செய்திருக்கிறார்களென்றும், அவர்கள் நீங்கினமையால் பௌத்தர் மேலிட்டு இத்தேசத்தாரையும் சோழனையும் வேறுபடுத்தினரென்றும், அதனால் இந்நகரம் மருதங்காடுகொண்டதென்றும், பூசித்தற்கு வேறொருவரும் இல்லாமையால விநாயகக்கடவுள், சிவாராதனஞ்செய்தலோடு சிவாஞ்ஞையால் அன்பர்களுக்கு யாதொரு இடையூறும் அணுகா வண்ணம் ஆண்டுவருகிறாரென்றும், உமது வரவையும், உம்மால் இவ்விடத்துச் சிவநேயந் தழைத்தோங்குமென்பதையும், முன்பு சிவபிரான் விநாயகருக்குக் கூறியருளினரென்றும் கூறினர். முனிவர் ஆநந்தமுற்று, "ஸ்வாமீ! அடியேனுக்குச் சிவபூசாவிதியை யருளுக'' என்று வேண்ட; அப்படியே அவர் உபதேசித்தருளினர். பின்பு முனிவர் நாடோறும் பூசித்து, ஸாம்பதக்ஷிணாமூர்த்தியாகத் தமக்குப் பரமசிவன் காட்சிகொடுத்தருளப்பெற்று, மீட்டும் சிவாராதனஞ்செய்துகொண்டு, இந்த ஸ்தலத்தேவசித்திருந்தனர்.

அக்காலத்திலே காஞ்சீபுரத்தில் சோழபரம்பரையில் ஜனித்து, சகலவித்தியாபாரங்கதனாய், சிவபக்திச்செல்வம் வாய்ந்து, அர

சாண்ட வீரசோழனென்பவன், ஸ்தலயாத்திரைசெய்ய எண்ணிப் புறப்பட்டு பலஸ்தலங்களையுந் தரிசித்துக்கொண்டேவந்து, இந்த க்ஷேத்திரத்தையடைந்து, ஸ்வாமி தரிசனஞ்செய்து, அளவிறந்த மகிழ்ச்சியுடையவனாய், உரோமசமகாமுனிவரால் ஆஞ்ஞாபிக்கப் பட்டு, விதிப்படி ஆலயத்திருப்பணிசெய்து, காடுவெட்டி நகரமுண் டாக்கி, அதில் நான்குவருணத்தாரையும் மற்றையோரையும் முறை யே குடியேற்றி, சிவபிரானுக்கு நித்தியபூசைமுதலியவற்றை முன் னையிலுஞ் சிறக்கப்புரிவித்து, புஷ்யோத்சவத்தையும் விதிப்படி செவ்வையாக நடத்தி, இன்னும் வேண்டுவனவற்றையெல்லாஞ்செ ய்து, இந்த ஸ்தலத்திலிருந்தே பலநாள் அரசாண்டுவாழ்ந்து, தனது புத்திரனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்வித்து, புன்பு சிவபதமடைந் தான். உரோமசமகாமுனிவரும், பலமுனிவரோடு இந்த ஸ்தலத்தி லேயே சிவயோகம் பயின்று வசித்திருந்தார்.

## மார்க்கண்டேய முனிவர்பேறுபெற்றது.

மார்க்கண்டேயமுனிவர் அர்த்தநாரீசுவர வடிவந் தரிசிக்க வி ரும்பி, இந்தஸ்தலத்தை யடைந்து, தவஞ்செய்து, பரமசிவன் அந்த வடிவினராகிக் காட்சிகொடுக்கப்பெற்று, தரிசித்துப் பேரானந்தம டைந்தார்.

## சுகீர்த்தியகப்பேறடைந்தது.

காஞ்சிபுரத்தில் முன்னம் அரசனாகவிருந்த சுகீர்த்தியென்ப வன், தனக்குப் புத்திரனில்லாமையால் வருந்தி, அக்காலத்தில் சுவே தாரண்யத்தில் யாகஞ்செய்துகொண்டு எழுந்தருளியிருந்த அகஸ் தியமுனிவரையடைந்து பணிந்து தன் மனக்குறையை விண்ணப் பஞ்செய்தான். அவர், பிதிர்களுக்குத் திர்ப்திசெய்தாற் புத்ரனுண் டாவான் என்றும், அதற்கு மற்ற இடங்களெல்லாவற்றினும் திரு

விடைமருதூரே சிறந்ததுஎன்றும், அந்தக்ஷேத்ரத்தில் இது செய்து பேறுபெற்றோ ரநேகர் என்றும், நீயும் அங்கேசென்று நான்சொன்னபடிசெய்து பேறுபெறுதி என்றுங்கூறியருளினர். அரசன் விடைபெற்று, இந்த ஸ்தலத்தையடைந்து, சுவாமிதரிசனஞ்செய்து, பிதிர்களுக்குத் திர்ப்திசெய்து, சற்புத்திரனைப்பெற்று, பெருமகிழ்வுற்று, பலநாளிந்த ஸ்தலத்தின்கணிருந்து அரசாண்டு, பின்னர்ப் புத்திரனுக்கு முடிசூட்டிச் சிவபதமடைந்தான்,

## வசிஷ்டர் முதலியோர் சித்திபெற்றது.

வசிஷடர்முதலிய பலமுனிவர், அஷ்டமாசித்தியைப் பெறுதற்பொருட்டு ஒருயாகஞ்செய்யநினைந்து, ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுளைப் பணிந்து, தம்முடைய எண்ணத்தைக்கூறி, "யாகஞ்செய்தற்குரிய ஸ்தானமொன்று தெரிவித்தருளுக" என்று விண்ணப்பஞ்செய்ய; அவர், இந்த ஸ்தலத்தின் மகிமைகளை யறிவுறுத்தி, அம்முனிவர்களுடன் 'இந்த க்ஷேத்திரத்தை யடைந்து, ஸ்வாமியை அவர்களுக்குத் தரிசனஞ்செய்வித்து, கங்காதேவியை நினைத்தனர். உடனே வந்த கங்காதேவியைநோக்கி, அவர் "சிவபிரானுக் கபிஷேகித்தற்பொருட்டும், யாவருமாடி யுய்தற்பொருட்டும், இந்தஸ்தலத்திலிருப்பாயாக" என; அவ்வாறே மூலஸ்தானத்திற்கு ஈசானதிக்கில் ஒருகூபவடிவா யமர்ந்தனள். குமாரக்கடவு ளந்தக்கங்காதீர்த்தத்தினால் ஸ்வாமிக்கு அபிஷேகஞ்செய்து பூசித்தனர். முனிவர்களும் குமாரக்கடவுள் ஆஞ்ஞையின்படி, காவிரியிலும் மற்றைத்தீர்த்தங்களிலும் இந்தக்கங்காதீர்த்தத்திலும் ஸ்நாநம்பண்ணி, பரமசிவனை வழிபட்டு, அவரனுக்ஞைபெற்று, பின்பு வேண்டுவனவற்றைக் கொண்டு குறித்தபடியாகஞ்செய்ய; அதன்முடிவில், பரமசிவன் அம்பிகையோடும் விர்ஷபாரூடராய்க் காட்சிகொடுத்தருளினர். முனிவர்கள் தரிசித்து, தாம் விரும்பிய சித்திகளைப்பெற்று, பலநாளிந்த ஸ்தல

த்தில் வழிபாடு செய்துகொண்டிருந்து, தம்மை யடைந்தவர்களுக்கும் அந்தச் சித்திகளையளித்து, பின்பு ஸ்வாமியிடத்தில் விடைபெற்று, தத்தந்தபோவனமடைந்து தவஞ்செய்திருந்தனர்.

## தீர்த்தமகிமை.

(க.) காருண்யாமிர்தம் :—இது இந்த ஸ்தலத்திலுள்ள எல்லாத்தீர்த்தங்களினும் சிறந்தது. இதில் சித்திரை விஷு புண்ணியகாலத்தில் ஸ்நானம்பண்ணுதல் விசேஷம். இந்தத் தீர்த்தத்தின் ஈசானதிக்கில், திரிமூர்த்திவடிவினதாகிய அரசவிர்க்ஷமொன்றுண்டு. சோமவார அமாவாசையின்காலையில், இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி, அந்த அசுவத்தத்தை ஏழுமுறை வலம்வருபவர்கள் உலகையெல்லாம் வலம்வந்த பலனையடைவார்கள். வேதாத்தியயனஞ்செய்யாத பிராமணனும், சிவலிங்கத்தையும் பெண்களையும் விற்றவனும், மதுபானஞ்செய்தவனும், சிராத்தஞ்செய்யாது விட்டவனும், களவுகொலை செய்தவனும், மாதாபிதாக்களையிகழ்ந்தவனுமாகிய இவர்கள், இதில் ஸ்நானம்பண்ணுவாராயின், அப்பாவத்தினின்றும் நீங்குவார்கள். இதில் ஸ்நானஞ்செய்பவன் அஷ்டைசுவரியத்தையும், சதுர்த்தச வித்தையையுமடைவான். விரோதிகளும் வியாதிகளும் நீங்கப்பெற்று, மறுமையிற் சிவ சாருபத்தையும்பெறுவான். இதில் ஸ்நானம்பண்ணினவன் உலகத்திலுள்ள எல்லாப் புண்ணிய தீர்த்தங்களிலும் ஸ்நானம்பண்ணின பலனை யொருங்கே யடைவான். இதில் ஏதாவது ஒரு காலத்தில் ஸ்நானம்பண்ணிப் பிதிர்களைக்குறித்துத்தர்ப்பணஞ்செய்வோர், ஒரு வருஷத்திலுள்ள பிதிர்தினங்களாகிய தொண்ணூற்றாறுதினத்திலும் பிதிர் சிராத்தம்பண்ணின பலனையடைவார்கள். இந்தத்தீர்த்தத்தால் பேறுபெற்றோர் பலர்.

முன்னொருகாலத்தில் கங்கை, யமுனை, தாமிரபர்ணி, வாணி, சோணபத்திரை முதலிய நதிகள், திருக்கைலாஸத்தை யடைந்து

பரமசிவனை வணங்கி ஸ்துதித்து, "ஸ்வாமீ! ஸ்நானம்பண்ணுபவர்கள், எம்பால் நீக்கிய பாவங்களால் மலினமுற்று வருந்துகின்றோம். இத்துன்பம் நீங்குமாறு அருள்புரிக" என்று பிரார்த்திக்க; பரமபதி, "காருண்யாமிர்தத்தில் ஸ்நானம்பண்ணுமின், உமது எண்ணம் வாய்க்கும்" என்றருளினர். அதுகேட்டு மகிழ்வுற்று, விடைபெற்று, இந்த ஸ்தலத்தையடைந்து, இதில் ஸ்நானம்பண்ணித் தமது மலினம் நீங்கினர். அவ்வாறே வருஷந்தோறும் சித்திரை விஷு புண்ணியகாலத்தில் இதிலாடி, தமது குற்றங்களைப்போக்கி, தமக்குரிய இடங்களையடைவாராயினர்.

இவ்வண்ணம் நிகழுங்காலத்தில் மிதிலாநகரத்தின் அரசனாகிய இஷ்டரோமனென்பவன் புத்திரனில்லாதுவருந்தி, உதங்கமுனிவரரால் ஏவப்பட்டு, மனைவியோடு இந்தஸ்தலத்தையடைந்து, தினந்தோறுங் காருண்யாமிர்தத்தில் ஸ்நானம்பண்ணி, பரமசிவனை வழிபட்டிருக்குங்காலையில், அவன்மனைவி கர்ப்பிணியாய் ஒரு சற்புத்திரனைப்பெற்றாள். அரசன்மகிழ்ந்து, சிலநாள் மருதவனேசருக்குப் பலபணிகள் செய்துகொண்டிருந்து, பின்பு தன் நகரமடைந்து, புத்திரனுக்குப் பதினறுபிராயமாகுகையில், காசிராஜன் புத்திரியை விவாகஞ்செய்யக்கருதி, தனக்குரிய எல்லாப்பரிவாரங்களோடும் காசிநகரமடைந்து, அந்நகரத்தரசனாலமைக்கப்பட்ட மாளிகையின்மேவி, மறுநாட்காலையில் ஸ்நானம்பண்ணுதற்பொருட்டுக் கங்கைக்கரையையடைந்து நிற்கையில், ராஜகுமாரன் முன்னதாக அக்கங்கையிலிறங்கினன். அந்தக்காலம் கங்காநதி, இந்தக் காருண்யாமிர்தத்திற்கு வருங்காலமாதலால், அந்தக் குமாரனோடு அந்தர்வாகினியாய், இந்தத்தீர்த்தத்தையடைய, அக்குமாரன் கண்டோர் ஆச்சரியமுறும்படி கரையேறி, இந்நகரில் அரசாண்டிருந்த சோழராஜன் மனையில், அவனாலாதரிக்கப்பட்டிருந்தனன். அங்கே இஷ்ட

ரோமன், கங்கையிலிறங்கிய தனது புத்திரனைக்காணாது கவலையுற்று, நிகழ்ந்ததை ஆகாசவாணியாலறிந்து, உடனே புறப்பட்டுச் சில்நாளில் இந்த க்ஷேத்திரத்தையடைந்து, தனது புத்ரனைக்கண்டு மகிழ்வுற்று, அவனுடன்சென்று சுவாமிதரிசனஞ்செய்து, விடைபெற்று, காசியையடைந்து, அப்புத்திரனுக்கு விவாகஞ்செய்வித்து, தனது ராஜதானியாகிய மிதிலாநகரத்தையடைந்து, அரசாண்டு வாழ்ந்திருந்தான்.

(௨.) பாணதீர்த்தம்:—இது திருக்கோயிலுக்கு வடகீழ்த்திசையிலுள்ளது. இதற்குத் தேவதை இராமன். தீர்த்தபாலர் முருகக்கடவுள். ரிஷி வசிஷ்டர். விர்க்ஷம் அசுவத்தம். இதில் விர்ஷபமாசத்துப் பௌர்ணிமையில் ஸ்நாநம்பண்ணுதல் விசேஷம். இதில் ஸ்நாநம்பண்ணுவோர் பால், தயிர், நெய் என்பனவற்றைத் தானஞ்செய்தல்வேண்டும். இதில் பிதிர்களைக்குறித்துத் தர்ப்பணஞ்செய்தால், கயையிற்செய்தபலனுண்டாகும். முன்னம் தசரதசக்கிரவர்த்தியின் ஆஞ்ஞைப்படி, தண்டகாரணியத்தை யடைந்த இராமன், இந்த ஸ்தலத்தைமேவி, தனது நியமத்தைமுடித்தற்பொருட்டுத் தீர்த்தமுண்டாக்கவேண்டி, ஒருபாணத்தைப் பூமியிற் பிரயோகஞ்செய்ய உண்டானமையால் இது பாணதீர்த்தமெனப் பெயர்பெற்றது. இதன் வடகரையில் இராமனால் அர்ச்சிக்கப்பட்டெழுந்தருளியிருக்கின்ற பாணலிங்கத்தைத் தரிசிப்போர் வேண்டியவற்றைப்பெறுவர்.

(௩.) பராசரதீர்த்தம்:—இது காருண்யாமிர்தத்திற்கு வடகிழக்கில் ஓரம்புவீழ் தூரத்திலுள்ளது. இதற்குத் தேவதை வாயு. தீர்த்தபாலர் பைரவக்கடவுள். ரிஷி கண்ணுவர். விர்க்ஷம் வேம்பு. இதில் மார்கழிமாசத்தில ஸ்நாநம்பண்ணுதல் விசேஷம். இதில் ஸ்நாநம்பண்ணுவோர் திலதானஞ்செய்தல்வேண்டும். பராசரமுனிவர், மத்

சகந்தியைச் சேர்ந்தமையால் அருவருப்படைந்து, மனக்கலக்கமுற்று, அதை மாற்றவெண்ணி, உரோமசமகாமுனிவரா லாஞ்ஞாபிக்கப்பட்டு, இந்தத் தீர்த்தத்தில் ஸ்நாநம்பண்ணி, அந்த அருவருப்பொழிந்து இன்புற்றனர். இதனு லித்தீர்த்தம் பராசரதீர்த்தமெனப்பெயர் பெற்றது.

(ரு.) சோமதீர்த்தம்:—இது, காருண்யாமிர்த தீர்த்தத்திற்குக் கிழக்கே ஓரம்புவீழ்தூரத்திலுள்ளது. இதற்குத் தேவதை சந்திரன். தீர்த்தபாலர் சண்டேசுரர். ரிஷி கௌதமர். விர்க்ஷம் அடம்பு. இதில் சோமவாரத்தில் ஸ்நாநம்பண்ணுதல் விசேஷம், இதில் ஸ்நாநம்பண்ணுவோர் கன்னிகாதானம், பாயசதானம், பலதானம் செய்தல்வேண்டும். இந்தத் தீர்த்தஸ்நாநத்தால் பஞ்சமகாபாதகமுதலியன நீங்கும். இது, இந்த க்ஷேத்திரத்திலுள்ள கனகதீர்த்தத்தில் ஸ்நாநம் பண்ணி க்ஷயரோகமொழிந்த சந்திரனுலுண்டாக்கப்பட்டதாதலின் இப்பெயர்பெற்றது.

(௬.) வேறொருசோமதீர்த்தம்:—இது, கனகதீர்த்தத்திற்குநிருதிதிக்கில் ஓரம்புவீழ்தூரத்திலுள்ளது. இதற்குத்தேவதை ஸ்ரீ சங்கரர். தீர்த்தபாலன் சந்திரன். ரிஷி தூர்வாசர். விர்க்ஷம் மகிழ். இதில் ஸ்நாநம்பண்ணுவோர் நெய், திலம், வஸ்திரம், அரிசி, புஷ்பம், சந்தனம் என்பவற்றைத் தானஞ்செய்தல்வேண்டும். இந்தத் தீர்த்தஸ்நாநத்தால் இழிகுலத்தோருடைய ஆகாரசேஷமும், ஸ்திரீசேஷமுதலியனவும் புசித்ததனுலுண்டாகுந்தோஷம் நீங்கும். சந்திரன் முற்காலத்தில் பெரிதானபாவமொன்றைச் செய்து, அதனுல் தனது கலைகுறைதலைக்கண்டு, மிகவுங் கவலையுற்று, இந்தத் தீர்த்தத்தில் ஸ்நாநம்பண்ணிக் கலைவளரப்பெற்று வாழ்வுற்றனன். இதனுலிந்தத்தீர்த்தமும் அப்பெயர்பெற்றது.

(சு.) ருத்ரதீர்த்தம்:—இது மூலஸ்தானத்திற்குத் தெற்கே யுள்ளது. இதற்குத்தேவதை ஈசுவரன். தீர்த்தபாலன் கருடன். ரிஷி பிப்பிலர். விர்க்ஷம் தமாலம். இதில் ஸ்நாநம்பண்ணுவோர் தேன் கம்பலம் இவற்றைத் தானஞ்செய்தல்வேண்டும். இந்தத் தீர்த்த ஸ்நாநத்தால் கொடியவியாதிகளெல்லாந் தீரும். "யாம் சிவபெருமானையொத்திருக்கிறோம்" என்று தருக்கிய உருத்திரர் பலர் அவராற் சபிக்கப்பட்டு, மீன்வடிவமுற்று, சிலகாலைக்குப்பின் இந்தத் தீர்த்தசம்பந்தத்தால் அம்மீன்வடிவ நீங்கப்பெற்று, பண்டைவடிவமுற்று, சிவபெருமானுக்கு அணுக்கர்களாயினர். இதனால் இந்தத் தீர்த்தம் உருத்திரதீர்த்தமெனப் பெயர்பெற்றது. மற்றொருகாலத்தில் நிமிச்சக்கிரவர்த்தியின் குமாரனான திர்ஷ்டகேது வென்பவன், தனது புத்திரனுக்கு ஸம்பவித்த கண்டமாலையென்னும் நோயைத் தீர்த்தற்குப் பலவாறு முயன்றும், அது தீராமையாற் கவலைகூர்ந்து, பூர்வஜன்மத்திற்செய்த சிவத்துரோகத்தால் அவனுக்கு அந்நோய் வந்ததென்பதையும், இந்த ருத்ரதீர்த்தத்தில் ஸ்நாநம்பண்ணினால் நீங்குமென்பதையும், காத்தியாயனமுனிவராலறிந்து, இந்த ஸ்தலத்தையடைந்து, இதில் ஸ்நாநம்பண்ணுவித்தவுடனே கண்டமாலை காணததாய்க் காய்ந்துபோயிற்று. அரசன்கண்டு மகிழ்ந்து, வெகுகாலம்இந்தஸ்தலத்திலேயே வாசஞ்செய்துகொண்டிருந்து, தனதுதேசத்திற்பாதியை ஸ்ரீ மகாலிங்கப்பெருமானுக் கர்ப்பணஞ்செய்து, பின் தன்னகரடைந்துவாழ்ந்திருந்தான்.

(எ.) பதுமதீர்த்தம்:—இது, பின் சொல்லிய சோமதீர்த்தத்திற்கு அக்கினிதிக்கிலுள்ளது. தேவதை ஸ்ரீமகாலிங்கமூர்த்தி. தீர்த்தபாலன் நாகமுகன். ரிஷி பிர்ம்மா. விர்க்ஷம் வில்வம். இதில் ஸ்நாநம்பண்ணுவோர் தானியம், வெல்லம், உப்பு, பருத்தி இவற்றைத் தானஞ்செய்தல்வேண்டும். இந்தத் தீர்த்த ஸ்நாநம் எல்லாச் செல்

வங்களையுங்கொடுக்கும். பாவங்களையெல்லாம் நீருகச்செய்யும். முன்பு இதில் ஸ்நாநம்பண்ணிய விசேஷத்தால் மகாபலிச்சக்கிரவர்த்தி மூன்றுலோகத்தையும் ஆண்டான்.

(அ.) பாண்டவதீர்த்தங்கள்:—இவை, பதுமதீர்த்தத்திற்குத் தெற்கே தருமதீர்த்தம், வீமதீர்த்தம், அர்ச்சுனதீர்த்தம், நகுலதீர்த்தம், சகாதேவதீர்த்தம் என ஐந்தாயுள்ளன. இவற்றிற்குத் தேவதைகளும் தீர்த்தபாலர்களும் முறையே சம்பு, நந்திதேவர், சுப்பிரமணியர், பிருங்கி, சண்டேசுரர் என்பவர்களாம். ரிஷிகள், பாரத்துவாசர், ஜதுகர்ணர், கௌதமர், மாண்டவியர், பயிலர் என்பவர்களாம். விர்க்ஷங்கள் நாவல், மா, நெல்லி, ஆல், வேம்பு என்பனவாம். இவற்றில் ஸ்நாநம்பண்ணுவோர் முறையே, உதகும்பம், குடை, விசிறி, வஸ்திரம், பாதுகை என்பவற்றைத் தானஞ்செய்தல் வேண்டும். இந்தத் தீர்த்தஸ்நாநத்திஞல் எல்லாச் செல்வமும்பெறலாம். நோயும் பகையும் நீங்கும். சூதாட்டத்தால் தமது செல்வமுழுவதையும் இழந்த பாண்டவரைவரும் வனவாசம்பண்ணுகையில், கண்ணபிராஞலேவப்பட்டு, இந்த ஸ்தலத்தையடைந்து, சிவபிரானைத்தரிசித்து, அப்பொழுதுண்டான அசரீரிவாக்கின்படி இந்தத் தீர்த்தங்களை முறையேயுண்டாக்கி, இவற்றில் பலநாள் ஸ்நாநம்பண்ணிக் கொண்டிருந்து, பின்பு தமக்குரிய எல்லாச் செல்வத்தையுமடைந்தனர். இதனு லிந்தத் தீர்த்தங்கள் பாண்டவதீர்த்தமென்று பெயர் பெற்றன.

(கூ.) இந்திரதீர்த்தம்:—இது திருக்கோயிலுக்குக் கிழக்கேயுள்ள சோமதீர்த்தத்திற்குத் தெற்கேயுள்ளது. தேவதையும், ரிஷியும் இந்திரன். தீர்த்தபாலர் சந்திரசேகரர். விர்க்ஷம் முள்ளிலவு. இதில் ஸ்நாநம்பண்ணுவோர் இரும்பு, வெள்ளி, எருமை, பால், தாம்பூலம் இவற்றைத் தானஞ்செய்தல் வேண்டும். இந்திரன், முன்

னம் வலாசுரனைப் போரில் வெல்லமாட்டாது வஞ்சித்துக்கொன்ற தோஷத்தையும், பாகாசுரனைக்கொன்ற தோஷத்தையும், இந்தத் தீர்த்தஸ்நாநத்தால் அகற்றிப் பரிசுத்தனாயினன். இதனாலிது இந்திர தீர்த்தமெனப் பெயர்பெற்றது.

(க0.) அக்கினிதீர்த்தம்:—இது இந்திரதீர்த்தத்திற்குத் தெற்கே மூன்றம்பு வீழ்தூரத்தேயுள்ளது. தேவதை ஸ்ரீசங்கரர். தீர்த்தபாலன் அக்கினிதேவன். ரிஷி கபிலர். விர்க்ஷம் நெல்லி. இதில் ஸ்நாநம்பண்ணுவோர் தயிர், நெய், பாற்பசு இவற்றைத் தானஞ்செய்தல்வேண்டும். க்ஷேத்திரபாலராகிய பைரவக்கடவுள், ஒரு தினம் உலாவி, வருகையில், அவருடைய சூலமமுழ்ந்திய இடத்திலுண்டானமையால், முன்பு இதற்குச் சூலகாதமென்று ஒருபெயருண்டு. அக்கினிதேவன், காண்டவவனத்திலுள்ள உயிர்களையெல்லாம் எரித்துவருத்தினமையால் தனக்குண்டானபாவத்தை இதில் ஸ்நாநம்பண்ணிப்போக்கியுய்ந்தனன். அதனாற் பின்பு இது அக்கினி தீர்த்தமெனப்பெயர்பெற்றது.

(கக.) யமதீர்த்தம்:—இது, அக்கினி தீர்த்தத்தினுடைய நிருதி திக்கிற்குத்தெற்கே ஏழம்புவீழ் தூரத்திலுள்ளது, இதற்குத்தேவதை அகோரமூர்த்தி. தீர்த்தபாலன் ரிடன். ரிஷி யமன். விர்க்ஷம் பாதிரி, இதில் ஸ்நாநம்பண்ணுவோர் திலம், இரும்பு, சுவர்ணம், பருத்தி, கம்பளம், எருமை, எருமைக்கடா இவற்றைத் தானஞ்செய்தல்வேண்டும். இந்தத் தீர்த்த ஸ்நாநத்தால், இம்மையிற் குஷ்டநோய்முதலியனவும், மறுமையில் யமவாதையும் நீங்கும். இது, இந்தஸ்தலத்தில் தவஞ்செய்த அம்பிகையின் தவச்சாலையைக் காத்திருந்த யமனால் உண்டாக்கப்பட்டதனால் யமதீர்த்தமெனப் பெயர்பெற்றது. மற்றொருகாலத்தில் அகஸ்தியமுனிவர், சிவபெருமானது அகோரவடிவந் தரிசித்தற்கெண்ணி, இந்தத்தீர்த்தத்தின்கரையில் தவஞ்செய்து

தமதெண்ணப்படியே பரமசிவன் காட்சிகொடுத்தருளப் பெற்று, பின்னும் வேண்டிய வரங்களைப்பெற்றனர். அகஸ்தியமுனிவருக்குக் காட்சிகொடுத்தவண்ணமே, இதன் கரையில் சிவபிரான் அகோரவடிவாய் எழுந்தருளியிருக்கின்றனர். இதில் ஸ்நாநம்பண்ணி இந்த மூர்த்தியைத் தரிசிப்போர் தமது இஷ்டசித்திகளெல்லாம் பெற்றுத் திருவருட்குப் பாத்திரராவார்.

(கஉ.) நிருதிதீர்த்தம்:—இது யமதீர்த்தத்திற்கு மேற்கே மூன்று அம்புவீழெல்லையிலுள்ளது. இதற்குத் தேவதை விரூபாக்ஷர். தீர்த்தபாலன் நிருதி. ரிஷி வசிஷ்டர். விர்க்ஷம் கருங்காலி. இதில் ஸ்நாநம்பண்ணுவோர் கூஷ்மாண்டம், உழுந்து, எண்ணெய், எள்ளன்னமுதலியவற்றைத் தானஞ்செய்தல்வேண்டும். இதனால் ஜ்வரமுதலியரோயும், பைசாசமுதலியவற்றாலுண்டாகும் வாதையும் நீங்கும். நிருதி இதனை யுண்டாக்கி, இதனால் யாவரும் நன்மையடையும்வண்ணம் சிவபெருமானிடத்து வரம்பெற்றனன். இதனால் இது நிருதிதீர்த்தமெனப் பெயர்பெற்றது.

(கங.) வருணதீர்த்தம் :—இது திருக்கோயிலுக்குமேற்கே பதினைந்து அம்புவீழெல்லையிலுள்ளது. இதற்கு தேவதை சத்தியோசாதமூர்த்தி. தீர்த்தபாலர் விநாயகக்கடவுள். ரிஷி பரத்துவாசர். விர்க்ஷம் மகிழ். இதில் ஸ்நாநம்பண்ணுவோர் தாம்பூலம் குதிரை இவற்றைத் தானஞ்செய்தல்வேண்டும். இந்தத்தீர்த்த ஸ்நாநத்தால் எவ்விதநடுக்கங்களும் நீங்கும். திரிபுரத்தசுரர்களால் மிகுந்ததுன்பமுற்ற தேவர்கள் இந்தஸ்லத்தையடைந்து, காருண்யாமிர்த முதலியதீர்த்தங்களிலாடி, பின்பு இந்த வருணதீர்த்தத்தில் ஸ்நாநம்பண்ணி, இதன் கரையிலிருந்து தவஞ்செய்யுங்காலையில், ஸ்ரீமகாலிங்கப்பெருமான், சத்தியோஜாதமூர்த்தியா யெழுந்தருளிக் காட்சிகொடுத்து, "தேவர்காள்! சிறிதும் நடுக்கமடையவேண்டாம்" என்று அபயமளித்து, பின்பு அம்முப்புரங்களையு நகைத்தெரித்து, தத்தம்பதவியை

யடையும்வண்ணம், தேவர்களுக் கருள்புரிந்தனர். இந்தக்காரணத்தால் இதன் கரையிலெழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்கு, நடுக்கந் தீர்த்தவரென்று திருநாமம் வழங்குகின்றது. இந்தத்தீர்த்தம் வருணனாலுண்டாக்கப்பட்டதாதலின் வருணதீர்த்தமெனப் பெயர் பெற்றது.

(கச.) வாயுதீர்த்தம்:—இது வருணதீர்த்தத்திற்கு வடக்கே ஓரம்புவீழ் தூரத்திலுள்ளது. இதற்கு தேவதை வாயு. தீர்த்தபாலர் முருகக்கடவுள். ரிஷி கண்ணுவர். விர்க்ஷம் மகிழ். இதில் ஸ்நாநம்பண்ணுவோர் கன்னிகாதானம், சத்திரதானம், சுவர்ணதானஞ் செய்தல்வேண்டும். இந்தத்தீர்த்த ஸ்நாநத்தால், வாயுசம்பந்தமான நோய்கள்யாவும் நீங்கும். கிருகலனென்னும் ஒருபிராமணன் தனது குலாசாரமுழுதையும் விட்டொழிந்து, பதிதன்பதினென்று எல்லாராலுந் தள்ளப்பட்டு, பின்பு வேடனாய்ப்பிறந்து, இந்தஸ்தலத்தையடைந்து, இந்தத் தீர்த்தத்தில் ஸ்நாநம்பண்ணி, மகாபரிசுத்தனாகிச் சிவபதமடைந்தான். இதுவாயுவினா லுண்டாக்கப்பட்டதனால் வாயுதீர்த்தமெனப் பெயர்பெற்றது.

(கரு.) குபேரதீர்த்தம்:—இது வாயு தீர்த்தத்திற்குக் கிழக்கே ஐந்து அம்புவீழெல்லையிலுள்ளது. இதற்குத் தேவதை குபேரன். தீர்த்தபாலன் கண்டாகர்ணன். ரிஷி மார்க்கண்டேயர். விர்க்ஷம் சண்பகம். இதில் ஸ்நானம்பண்ணுவோர் மோதகம், கரும்பு, சர்க்கரை, புஷ்பம், கோதுமை என்பவற்றைத் தானஞ்செய்தல்வேண்டும். குபேரன் இதை யுண்டாக்கி, இதில் ஸ்நானம்பண்ணுவோர் எல்லாச்செல்வத்தையும் பெறும்பொருட்டு, பரமசிவனிடத்து வரம் பெற்றான். இது குபேரனா லுண்டாக்கப்பட்டதனாற் குபேரதீர்த்தமெனப் பெயர்பெற்றது.

(கசு.) ஈசானதீர்த்தம்:—இது குபேர தீர்த்தத்திற்குக்கிழக்கே இரண்டம்புவீழ் தூரத்தேயுள்ளது. இதற்குத்தேவதை ஸ்ரீசங்கரர். தீர்த்தபாலன் மாணிபத்திரன். ரிஷி வசிஷ்டர். விர்க்ஷம் விளா. இதில் ஸ்நாநம்பண்ணுவோர் ருத்ராக்ஷம், வஸ்திரம் இவற்றைத் தானஞ் செய்தல் வேண்டும். இந்தத் தீர்த்த ஸ்நாநம் நல்லசந்தானத்தையும் சிவஞானத்தையு மளிக்கும். மார்க்கண்டேயமுனிவர் இந்தத்தீர்த்தத்தில் ஸ்நாநம் பண்ணினமையால் சிவஞானமுற்று, யமவாதையொழிந்து, தீர்க்காயுவைப் பெற்றனர். இது ஈசானனு லுண்டாக்கப்பட்டமையின் ஈசானதீர்த்தமெனப் பெயர்பெற்றது.

(கஎ.) கிர்ஷ்ணகூபம். இது திருக்கோயிலுள் ஈசானதிக்கில் கிர்ஷ்ணனு லுண்டாக்கப்பட்டது. இதில் அஷ்டமிதிதியில் ஸ்நாநம்பண்ணுதல் விசேஷம். இதனுல் இரணத்துரோகமுதலியன நீங்கும். எல்லா ஐசுவரியத்தையும் பெறலாம். அசுரகுருவாகிய சுக்கிராசாரியர், வாமனமூர்த்திக்கு மூன்றடி மண்கொடுக்க வுடன்பட்ட மகாபலியைக் கொடாதேயென்று தடுத்தமையா லிழந்த தமதுகண்ணை, இதில் ஸ்நாநம்பண்ணிப் பெற்றுக்கொண்டனர். இது சிவபெருமானுக் கபிஷேகித்தற் பொருட்டுக் கிர்ஷ்ணனு லுண்டாக்கப்பட்டதனுல் இப்பெயர்பெற்றது.

(கஅ.) கனக தீர்த்தம்:—இது மூலஸ்தானத்திற்கு வாயுதிக்கிலுள்ளது. பரமபதியாகிய சிவபெருமானது திருவிழிகளினின்றும் பெருகிய பொன்னிறமுள்ள கருணைவெள்ளம் தன்னிடத்துப் பாயப்பெற்றமையாற் கனக தீர்த்தமென்று பெயர்பெற்றது. இது, காகத்திற்குப் பொன்னிறமருளி, உருத்திரவடிவ மளித்தமையாற் காக தீர்த்தமெனவும் பெயர் பெறும். ஒருவன் இதை நோக்கினுலும், ஸ்பரிசித்தாலும், சர்வபாபத்தினின்றும் நீங்குவான். சந்திரன் குருபத்நியாகிய தாரையைப் புணர்ந்தமையால் தனக்குண்

டான க்ஷயரோகத்தை இதிற்படிந்து மாற்றிக்கொண்டதுமன்றி பின்னும் சிவபெருமானுக்கு எட்டுத்திருமேனியி லொருதிருமேனியாயும், இடக்கண்ணாயும், முடிமணியாயும் விளங்கும் பேற்றையும்பெற்ருன். துங்கபத்திராநதி தீரத்திலுள்ள சப்த கோடீசுவரமென்னும் ஓரக்கிரகாரத்தில், சிவாராதானத்திற் சிறிதும் வழுவாத பிராமணனொருவ னிருந்தான். அவன் ஒருநாள் ஆராயாமல் புழு வெட்டுண்ட மலரைக்கொண்டு பூசித்ததனால், இரண்டுகண்ணையுமிழந்து, வசிஷ்டமுனிவர் நியமனத்தால் வந்து இந்தஸ்தலத்தையடைந்து, இந்தத்தீர்த்தத்தில் ஸ்நாநம்பண்ணிக் கண்களைப் பெற்றனன். இவனே மறுமையில் விசுவாமித்திர முனிவனாகிப் பிரசித்திபெற்றனன்.

(கக.) கங்காகூபம்:—இது திருக்கோயிலுக்குள் மூலஸ்தானத்திற்கு ஈசானதிக்கிலுள்ளது. இதன்வரலாறு முன்னே சொல்லப்பட்டது. இதை ஸ்பரிசிப்போரும், புரோக்ஷணஞ்செய்து கொள்வோரும், சமஸ்தபாவத்தினின்றும் நீங்குவார்கள். இதில் ஸ்நாநம் பண்ணுவோர் சிவலிங்கம், சிவிகை, ரதம், வெள்ளைக்குடை, சுவர்ணம் என்பனவற்றைத் தானஞ்செய்தல் வேண்டும். இதற்குவடதிசையில், அர்த்தநாரீசுவரரும், அக்கினிதிக்கில் விபண்டகமுனிவரும், கீழ்த்திசையில் பைரவரும், நிருதிதிக்கில், பிரமாவும், இதை ரக்ஷிப்பவர்களாய் எழுந்தருளியிருக்கின்றனர். இதன் மேற்றிசையில் மருதவிருட்சம் விளங்குகின்றது. இதனது சமீபத்தில் பிதிர்களைக்குறித்து, எந்த விசேஷகாலத்திலாயினும் தர்ப்பணஞ்செய்யின், ஒருவருஷத்திலுள்ள பிதிர்தினங்களாகிய தொண்ணூற்றாறுதினத்திலும் காசிக்ஷேத்திரத்திற்செய்ததாகப் பாவித்து, அப்பிதிர்கள் சந்தோஷிப்பர்.

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்.

(உ0.) கருட தீர்த்தம்:—இது திருக்கோயிலுக்கு எதிரேசிறிது தூரத்திலுள்ளது. கருடன் இதில் ஸ்நாநஞ்செய்து, பராக்கிரமம் பெற்று, தேவலோகத்திற்சென்று, அங்குள்ள எல்லாத்தடையுமகற்றி அமிர்தங்கொணர்ந்து, நாககணங்களுக்கு ஈந்து, அந்நாககணங்களின்றுயாகிய கத்துருவுக்கடிமைப்பட்டிருந்த தனது தாயாகிய விநதையை அவ்வடிமைத்திறத்தினின்று மீட்டனன். இதனுலிது கருடதீர்த்தமெனப் பெயர்பெற்றது.

(உக.) வசுதீர்த்தம்:—இது யமதீர்த்தத்திற்கு ஈசானதிக்கிலுள்ளது. இதில், சுக்கிலபக்ஷத்தின் அஷ்டமிதிதியில் ஸ்நாநம்பண்ணுதல் விசேஷம். இது வசுக்களாலுண்டாக்கப்பட்டமையா லிப்பெயர்பெற்றது.

(உஉ.) சூரியதீர்த்தம்:—இது வசுதீர்த்தத்திற்கு வடக்கேயுள்ளது. இதில் ஆதிவாரத்தில் உதயகாலத்தில் ஸ்நாநஞ்செய்தால் ஸகலரோகங்களும் நீங்கும். இது சூரியனுலுண்டாக்கப்பட்டதனுலிப்பெயர்பெற்றது.

(உ௩.) மருத்துக்கள் தீர்த்தம்:—இது சூரியதீர்த்தத்திற்குப் பக்கத்தேயுள்ளது. இதனுல் வாதநோய் நீங்கும். மருத்துக்கள் இதில் ஸ்நாநம்பண்ணி, கர்ப்பவாசஞ்செய்யும்பொழுது இந்திரனுல் அறுபட்ட தமது குறையுடல் வளரப்பெற்றுர்கள். இதனுலிது இப்பெயர்பெற்றது.

(உச.) நரசிங்கதீர்த்தம்:—இது வருணதீர்த்தத்திற்குத் தெற்கேயுள்ளது. இதனுற் குஷ்டநோய் நீங்கும். இது நரசிங்கமூர்த்தியாலுண்டாக்கப்பட்டமையி னிப்பெயர்பெற்றது.

(உரு.) நந்திதீர்த்தம்:—இது வருணதீர்த்தத்திற்குக் கிழக்கேயுள்ளது. இதனிடத்து ஸ்நாநம்பண்ணுவோர் சிவஞானமடைவர். இது திருநந்திதேவராலுண்டாக்கப்பட்டமையா லிப்பெயர்பெற்றது.

(உ௬.) துரோணதீர்த்தம்:—இது வருணதீர்த்தத்திற்கு மேற்கேயுள்ளது. இதில் துரோணாசாரியர் ஸ்நாநம்பண்ணி அசுவத்தாமா என்னும் புத்திரனைப்பெற்றார். இதனாலிது இப்பெயர்பெற்றது.

(உ௭.) இராகவகூபம்:—இது அம்பிகையின் சந்நிதியிலுள்ளது. இராவணனைக்கொல்லுதற்குச் செல்லும்பொழுது, இந்த ஸ்தலத்தையடைந்த இராகவனாலுண்டாக்கப்பட்டதாதலின் இது இப்பெயர்பெற்றது. இதில் ஸ்நாநம்பண்ணுவோர்க்குச்சத்துருபயம் நீங்கும்.

(உ௮.) சுரதீர்த்தம்:—இது வருணதீர்த்தத்திற்கு வடக்கே பதினெட்டு அம்புவீழெல்லையிலுள்ளது. இது தேவர்களாலுண்டாக்கப்பட்டதனாலிப்பெயர்பெற்றது. இது சிவப்பேறளிக்கும்.

(உ௯.) முனிதீர்த்தம்:—மூலஸ்தானத்திற்குத் தெற்கேயுள்ளது. இதில் ஸ்நாநம்பண்ணுவோர் சிவ கிர்பைக்குரியராவார்.

(௩௦.) கச்சபதீர்த்தம்:—இது இந்த ஸ்தலத்திற்கு உத்தர திசையிலுள்ள மகாமகிமைபொருந்திய காவிரிமாநதியின் வடபுறத்துள்ள ஒருதுறை. இதற்குத்தேவதை வாமதேவர். தீர்த்தபாலர் வீரபத்திரர். ரிஷி கச்சபர். விர்க்ஷம் மா. இதில் ஸ்நாநஞ்செய்வோர் எள்ளன்னம், சிவிகை, தானியங்கள் இவற்றைத் தானஞ்செய்தல் வேண்டும். இதில் ஸ்நாநம்பண்ணுவோர் மறுமையில் அரசராவர். கச்சபமுனிவர் நாடோறும் இதில் ஸ்நாநம்பண்ணிப் பெருந்தவஞ்செய்து, ஸ்ரீமகாலிங்கப்பெருமான் வாமதேவமூர்த்தியாயெழுந்தருளிக் காட்சிகொடுக்கத் தரிசித்து, "எம்பெருமானே! இந்தத்திருவுருவத்தோடு, இவ்விடத்தே எக்காலத்தும் எழுந்தருளியிருத்தல்வேண்டும்" என்றுபிரார்த்தித்தார். பரமசிவன் அவ்வாறே எழுந்தருளியிருக்கின்றனர். அம்மூர்த்தியைத் தரிசித்துப் பேறுபெற்றவர் அநே

கர். கச்சபமுனிவர் தவம்புரிந்து பேறுபெற்றமையால் இது கச்சப தீர்த்தமெனப் பெயர்பெற்றது.

(௩௧.) கௌதமதீர்த்தம்:—இது கச்சபதீர்த்தத்திற்கு மேற்கே ஓரம்புவீழ் தூரத்திலுள்ளது. தீர்த்தபாலர் சண்டேசுரர். ரிஷி கௌதமர். இதில் ஸ்நாநம்பண்ணுவோர் பூமி, பாற்பசு இவற்றைத் தானஞ்செய்தல் வேண்டும். அகல்யை இதில் ஸ்நாநம்பண்ணி, இந்திரசம்பந்தத்தால் சேர்ந்த தோஷத்தினின்றும் நீங்கிப் புனிதையானாள்.

(௩௨.) கல்யாணதீர்த்தம்:—இது காவிரியின் தென்புறத்தே, மூன்றம்புவீ ழகலங் கிழக்குமேற்கெல்லையுள்ள ஒருதுறை. இதற்குத்தேவதை மத்தியார்ச்சுனேசுவரர். தீர்த்தபாலர் திருநந்திதேவர். ரிஷி உரோமசர். விர்க்ஷம். அசுவத்தம். இதில் ஸ்நாநம்பண்ணுவோர் பசு, சுவர்ணம் முதலியவற்றைப் பிராமணர்களுக்குத் தானஞ்செய்தல் வேண்டும். இது எல்லாத் தீர்த்தங்களிலும் உத்தமமாகச் சொல்லப்படுகிறது.

இந்தஸ்தலத்தில் காசிபர்முதலிய முனிவர்களுக்குச் சிவதத்துவத்தை யுபதேசித்த ஸ்ரீஅகஸ்திய மகாமுனிவருடைய பூர்வப்பிரார்த்தனையை நிறைவேற்றுதற்கு ஏகநாயகராகிய பரமசிவன் திருவுளங்கொண்டிருப்பதை உமாதேவியார் அறிந்து, இந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி, விதிப்படி பூரகர்மா, ஆதிசக்திபூசை இவைகளைச்செய்து, அவரை விவாகஞ்செய்துகொண்டார். அகஸ்தியமுனிவர் அத்திருமணக்கோலத்தைத் தரிசித்துப் பேரானந்தப்பெருவாழ்வடைந்தனர். இதனால் இது கல்யாணதீர்த்தமெனப் பெயர்பெற்றது.

ஆகாசத்தில் விமானத்தி லெழுந்தருளிய நித்யகல்யாணரூபிகளாகிய பார்வதிபரமேசுவரர்கள், இந்தமஹாநதியினுடைய இரா

ண்டு தீரத்திலும், ஐந்துயோசனை யளவாக இருந்து தவஞ்செய்யும் முனிகணங்களின் சிரத்தா பக்திகளையும், தவச்செய்கைகளையுங்கண்டு மகிழ்வுறுகையில், அவர்கள் திருவிழிகள் பொழிந்த ஆனந்தபாஷ்பம், இவ்விடத்தே வீழ்ந்தமையால், முன்னரே கல்யாணவடிவினதாகிய காவேரியிலுள்ள இந்தத்துறை, கலியாண தீர்த்தமெனப் பெயர்பெற்றதென்று கூறுவதுமுண்டு. இதையல்லாமல், எல்லாமங்களங்களையும், முக்தியின்பத்தையுந் தன்னிடத்து ஸ்நாநம் பண்ணினோர் எளிதினடையச் செய்தலாலும், இதுகலியாண தீர்த்தமென்று சொல்லப்படும். இதில் விதிப்படி ஸ்நாநம்பண்ணி, கரையிலிருந்து ஸ்ரீ பஞ்சாக்ஷர செபம்பண்ணுவோர், சிவசாயுச்சியத்தையடைவர். கின்னரர்முதலியதேவகணத்தினர் யாவரும், தினந்தோறுமிதில் ஸ்நாநம்பண்ணி, தத்தம் நியமங்களை முடித்து, சிவார்ச்சனைசெய்து, எப்பொழுதும் மகிழ்ச்சியோடிருப்பர். இதில் ஸ்நாநம்பண்ணுதற்கு, எல்லாக்காலமு முரியனவாயினும், சோமவாரம் விசேஷம்; அதிலும் ஆதிவாரம் விசேஷம்; அதிலும் அமாவாசை விசேஷம்; அதிலும் சூரியோபராகம் சந்திரோபராகம் மகாவிசேஷமாம். எல்லாவற்றிலு மிகச்சிறந்தது தைப்பூசம். அதிலும், குருவாரத்தோடு புஷ்யநக்ஷத்திரம் கூடியதினம் மிகவும் விசேஷம். இந்தக்குருபுஷ்யதினத்தில், கங்கைமுதலிய எல்லாப்புண்யதீர்த்தங்களும் இதில்வாசம் பண்ணுகின்றன. இந்தத் தீர்த்தத்தில் ஸ்நாநம்பண்ணினால், கோடிஜன்மத்திற்செய்த பாபம் நீங்கும். இந்தக்காரணத்தால், இந்தக்கலியாணதீர்த்தத்திற்கு, புஷ்யதீர்த்தமென்னும் ஒருநாமதேயமுண்டு. இந்தத் தீர்த்தத்தில் ஸ்நாநம்பண்ணிப் பேறுபெற்றோர்பலர். அவருட்சிலர் சரித்திரம்வருமாறு.

(க.) கார்க்கோடகன், மகாபரிசுத்தனாகிய பரிட்சித்து மஹாராஜனைக் கடித்துக்கொன்றமையால், தனக்குண்டாகிய தோஷத்தை இதில் ஸ்நாநம்பண்ணி நீக்கி யுய்ந்தனன்.

(உ.) கலிபுருஷனால் எண்ணிறந்த துன்பமுற்ற நளராஜன், இதில் ஸ்நாநம்பண்ணி, பின்பு தன்மனைவியையும், மக்களையும், தேசத்தையுமடைந்து வாழ்ந்தனன்.

(௩.) பலராமர், தம்மைக்கண்டு சூதமுனிவர் எழவில்லையென்று சினந்து, அவரைக்கொன்ற தோஷத்தை, இந்தத்தீர்த்தஸ்நாநத்தாற் போக்கினர்.

(௪.) தைப்பூசத்தில், இதிற்படிந்தமையாலே, பகீரதன், பெறுதற்கரிய ஆகாசகங்கையைப் பூமியில் வருவித்து, தன்முன்னோரை நற்கதியடைவித்தனன்.

(௫.) மிகக்கொடியோனாகிய ஒருவன், சிவராத்திரி புண்ணியகாலத்தில், இந்தத் தீர்த்தத்தில் முழுகி, திருக்கோயிலிற் சென்று சிவத்திரவியத்தை யபகரித்துக் கொண்டு, வெளியே வந்தபொழுது மரணமடைந்தான். உடனே யவனைக் கிங்கரர்கள் யமனிடத்துக் கொண்டு போய்விட, யமன் அவனைநோக்கி, "நீ சிவராத்திரியில், கல்யாண தீர்த்தத்தில் முழுகினையாதலால், எமது தண்டனைக்குரியாயல்லை. கைலையங்கிரிக்குச் செல்வாயாக" என விட்டுவிட்டனன்.

(௬.) விதேகநாட்டிலே, காபிலமென்னுமூரிலுள்ள ஒரு பிராமணன், சிலஸ்திரீகளையும், சிலபாலர்களையும் கொன்று, சம்பாதித்த ஆபரணங்களைக் கொண்டு, ஐந்து ஸ்திரீகளை விவாகஞ் செய்தான். அவனது பாவமிகுதியால், அந்த ஐவரு மிறந்தபின்பு, கள்விற்போர் குலத்தினளாகிய ஒருத்தியைச் சேர்ந்திருந்தான். ஒரு குழந்தையைப்பெற்று அவளுமிறக்க, இதுவன்றோ அவள் மரணத்திற்குக்காரண மாயிற்றென்று; அக்குழந்தையைக்கிழித்து, ஆற்றில் விட்டனன். பின்பு அப்பாவங்களாற் பைத்தியங்கொண்டு, மூய

லகன் முதலிய கொடிய வியாதிகளையடைந்து, எல்லாராலுமிழிவு படுத்தப்பட்டு, மிகத்துன்புற்று, ஒருநாள் தற்செயலாய் இந்த ஸ்தலத்தையடைந்து, வீதியில் ரோகினால் வசமற்றுக்கிடந்தனன். அன்றைத்தினம் தைப்பூசமாதலால், புஷ்ய தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணிவருவோர்களுள்ளே சில பிராமணர், இவனைக் கண்டு இரங்கி, எடுத்தபொழுது அவர்கள் கையீரம்பட்டதனால், இவன் பித்தமயக்கமற்று, உணர்ச்சியுற்று, அவர்களை வணங்கிச்சென்று, புஷ்ய தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணிப் பரிசுத்தனாகி, மருதவாணரைத் தரிசித்துக்கொண்டு சிலநாளிருந்து முத்திபெற்றனன். இன்னும், இந்தத் தீர்த்தமகிமை, பின்வரும் சில சரித்திரங்களாலும் விளங்கும்.

(ருங.) சேஷதீர்த்தம்:—இது காவிரியின் தென்புறத்துள்ள ஒரு துறை. ஆதிசேஷன், ஒருகாலத்து இந்தப்பூமியைத் தாங்கும் வன்மை யில்லாதவனாய் மெலிந்து, இந்தஸ்தலத்தை யடைந்து, இத்துறையிற் படிந்து, வன்மை பெற்று, மகிழ்ச்சி யுற்றுச்சென்றான். இதனாலிது இப்பெயர் பெற்றது.

(ருச.) கந்ததீர்த்தம். இது, சேஷதீர்த்தத்திற்குக் கிழக்கே யுள்ளது. தேவகண்டகனாகிய சூரபன்மாவை வதஞ்செய்தற்பொருட்டு வீரபாகுதேவர் முதலிய தம்பிமாரோடும், லக்ஷம் வீரரோடும், இரண்டாயிரவெள்ளம் பூதகணங்களோடும், தேவர்களோடும் எழுந்தருளிய குமாரக்கடவுள், இதில் ஸ்நானம்பண்ணி, மருதவனேசரைத் தரிசித்து, அருள்பெற்று, வீரமகேந்திரமடைந்து வெற்றிபெற்றனர். இதனாலித்துறை கந்ததீர்த்தமெனப் பெயர்பெற்றது.

(ருரு.) ஐராவததீர்த்தம்:—இது, காவிரியின் தென்புறத்துள்ள ஒருதுறை. ஐராவதம் இத்துறையிற்படிந்து, துர்வாசமுனிவர் சாபத்தால் தனக்குண்டாகிய காட்டானைவடிவ நீங்கப்பெற்றது. இத

ஞ வித்துறை ஐராவத தீர்த்தமென்று பெயர்பெற்றது. இதற்குமு ன்னமே இது விநாயகதீர்த்தமென்று சொல்லப்படும்.

## வரகுணபாண்டியர்வழிபட்டது.

பாண்டி நாட்டிலே, மதுராபுரியிலே, வைதிகநெறியுஞ் சைவ நெறியுந் தழைத்தோங்க அரசியற்றிய வரகுணபாண்டியர், ஒருநாள் காட்டிற்சென்று, வேட்டையாடி, விரைந்து திரும்பிவருகையில் சூரியாஸ்தமயமாயிற்று. அப்போது, வழியிலயர்ந்துகிடந்த ஒரு பிராமணன் அவரேறியகுதிரையினல் மிதிக்கப்பட்டு இறந்தான். இரா ஜா, அதனை யறியாது தமது நகரத்தையடைந்தார். பிரமகத்தி அவரைப்பற்றி மிகவருத்தியது. அதனல் அவர் மனநொந்து, பலதா ன தருமங்களைச்செய்து வந்தார். ஒன்றினலும் அது தீராமையால், பின்பு தமது குலதெய்வமாகிய சோமசுந்தரமூர்த்தியைப் பிரார்த் தித்துக்கொண்டு வருநாளில், ஒருநாள் சிவபெருமானுடைய திரு வருளினலே, “ வரகுண ! இன்னுஞ்சிலநாளில், நீ மத்தியார்ச்சுன மடைவை; அப்பொழுது இதுதீரும். நீகவலைப்பட வேண்டாம்” என்று ஆகாசத்தில் ஓரசரீரி யுண்டாயிற்று. இராஜா அது கேட்டு மகிழ்ச்சியுற்றிருந்தனர். சிலநாளைக்குப்பின், சோழராஜன் யுத்தஞ் செய்தற்குவர, அரசர் அவனேடு யுத்தஞ்செய்து, அவனைத்துரத் திக்கொண்டேவந்து, இந்தஸ்தலத்தை யடைந்தார். அடைந்ததினம் குருபுஷ்யமாதலால், நிரம்ப மகிழ்வுற்று, விதிப்படி புஷ்யதீர்த்த த் தில் ஸ்நாநம்பண்ணி, அளவிறந்த தானங்களை அந்தணர்க்களித் து, பின்பு காருண்யாமிர்தத்திலும் ஸ்நாநம்பண்ணி, திருக்கோயி லுக்குள்ளே செல்லுகையில் அப்பிரமகத்தி நடுநடுங்கி வெளியே நின்றுவிட்டது. அரசர்மகிழ்ந்து, விதிப்படி சுவாமியையும், அம்பி

கையையுந் தரிசித்து இந்தஸ்தலத்திலே, என்றும் வசித்தல்வேண்டுமென்னுங் குறிப்புடையவராய், சிவபெருமான் கட்டளைப்படி மேலவாயில் வழியேசென்று, திருவீதியில் ஒருபக்கத்திலொருமாளிகை கட்டுவித்து, காலந்தோறுஞ்சென்று, சுவாமிதரிசனத்தோடு நூறு அசுவமேதப் பிரதக்ஷிணமுஞ்செய்துகொண்டு, அம்மாளிகையிற்றங்கி அரசியற்றுவாராய், பின்பு மேலக்கோபுரத்தைத் தம் பெயராற் கட்டுவித்து, திருக்கோயிலுக்குவடக்கே சோமசுந்தரக் கடவுளுக்கு ஓராலயமியற்றுவித்து, இன்னும் பலபலபணிகளியற்றிக் கொண்டிருந்தார்.

இப்படி யிருக்குங் காலத்தில் ஒருதினஞ்சென்று நமஸ்காரஞ் செய்யும்பொழுது, மருதவாணர், "வரகுண! கைலயங்கிரியின் கொடுமுடியையொப்ப ஒருமதில் கட்டுவித்து அதை வலஞ்செய்தி; அதைச் செய்யுமொரு பிரதக்ஷிணம், ஆயிரம் பிரதக்ஷிணத்திற்கொப்பாம். நமக்கு மிகவுவப்பாம்" என்றருளக்கேட்டு, அரசர் அவ்வாறே புரிவித்து வலம்வருவாராயினர்.

பின்னொருநாள், கொடிய கள்வனொருவனைச் சிரச்சேதஞ்செய்தற்பொருட்டுக் காவற்காரர்கள் இறுகக்கட்டிக்கொண்டு செல்லுகையில், அவன்நெற்றியில் திருநீறு விளங்குவதைக்கண்டு கட்டவிழ்த்துவிடுவித்து, அவனுக்கு வேண்டும் பொருளளித்து நயமொழி புகன்று விடுத்தனர்.

பின்னொருநாள், இரவிலே நரிகள் ஊளையிடுதலைக்கேட்டு, இவைகள் ஆலவாயானை யழைக்கின்றனவென்று மனமுருகிப் பிடித்து வருவித்து, நல்லவஸ்திரங்களா லவற்றைப் போர்த்து விடுத்தனர்,

பின்னொருநாள், ஒருதடாகத்தில் தவளைகள் சப்தித்தலைக்கேட்டு, இவைகள், "ஹரஹர" என்று சப்திக்கின்றனவென்று கருதி, இரத்தினங்களையும் சுவர்ணங்களையும் அத்தடாகத்தில் வாரியிறைத்தனர்.

பின்னொருநாள், திருமஞ்சன தைலத்திற்காக உலர்த்திய எள்ளைக் கோயில் வேலைக்காரனொருவனெடுத்துண்பதைக் கண்டு, "நீ இதை உண்ணலாமோ" என்றனர். அவன் "எள்ளுண்ட கடனைத் தீர்க்கவேண்டும்" என்னும் பழமொழிப்படி "மருதவாணர்க்கு மறுபிறப்பிலும் அடிமையாய் வருதற்பொருட்டு உண்கின்றேன்" என்ன, "அப்படியாயின், எனக்கும் இதிற் சிறிதுகொடு" என்று சொல்லி, அவன் எச்சிலெள்ளை வாங்கியுண்டனர்.

பின்னொருநாள், தலையோடொன்று இந்த க்ஷேத்திரவெல்லையிற் கிடத்தலைக்கண்டு, மனமுருகி, அதைத் தமது மலர்க்கரத்தாலெடுத்து, கண்ணீர் வெள்ளத்தாலாட்டி, "உம்மைப்போலத் தமியேனும் இந்த ஸ்தலத்தெல்லையில் என்தலைகிடக்கப்பெறுவேனோ" என்று மனமுருகினர்.

பின்னொருநாள், திருக்கோயிலின்முன்னே நாய்மலங்கிடத்தலைக்கண்டு, இதையெடுப்பவருக்கு "என்தேசத்திற் காற்பங்கு கொடுப்பேன்" என்று எண்ணி முதற்பிரதக்ஷிணமும், அதுஎடுக்கப்படாமையால் "அரைப்பங்கு கொடுப்பேன்" என்று இரண்டாம் பிரதக்ஷிணமும், "முக்காற்பங்கு கொடுப்பேன்" என்றுமூன்றும்பிரதக்ஷிணமும், "முழுமையுங்கொடுப்பேன்" என்று நாலாம்பிரதக்ஷிணமும் செய்தார். அதுவோ எடுக்கப்படவில்லை. அதுகண்டு அரசர் "என் தேசம் எனக்கேயுரியது" என்றுசொல்லி, அதைத் தமது திருக்கரத்தினால் எடுத்துப் புறத்தே எறிந்தார்.

பின்னொருநாள், திருவீதிப்பிரதக்ஷிணஞ்செய்யும்பொழுது பழுத்தவேப்பமரங்கள் வெயிலில் நிற்றலைக்கண்டு, "அந்தோ! சிவலிங்கத்தையொத்த திருவுருப் பலவற்றைத் தாங்கிய இவைகள் வெதும்புகின்றனவே" என்று இரங்கி, அம்மரங்களுக்கெல்லாம் மேற்கட்டி கட்டுவித்தனர்.

பின்னொருநாள், தாம் விவாகஞ்செய்துகொண்ட சோழராஜன் புத்திரியை இரவில் அந்தப்புரத்திற்கண்டு, "இவள் எம்பெருமானுக்கே யுரியள்" என்று நினைந்து, உடனே ஒருவருமறியாவண்ணம் அழைத்துக்கொண்டு ஆலயத்தையடைந்து திருமுன்னின்று, "மருதவாணா! இப்பெண்மணியை யங்கீகரித்தருள்க" என்று பிரார்த்தித்து, கதவைத்தட்டி அழைக்க; சிவபெருமான் கதவைத்திறந்து, "வரகுணா! வருதி" என்றழைத்தார். அப்போது பாண்டியர் ஸ்வாமீ "இப்பெண்மணியை யங்கீகரித்தருள்க" என்று பிரார்த்திக்க; எம்பெருமான் வலக்கைமாத்திரம் வெளியேதெரிய அப்பெண்மணியை உட்கொண்டருளினர். அரசர் அதுகண்டு, "இந்தக் கையைமாத்திரம் எளியேனால் தீண்டப்பட்டதென்றோ நீக்கியருளினீர்" என்று மனந்தளர; சிவபிரான் "உன்னன்பை உலகத்தார் அறியும்படி இக்கையை நாளை அங்கீகரிப்போம்" என்று கட்டளையிடுதலும், அரசர் மகிழ்ந்துவெளியே வந்தார். திறக்கப்பட்ட கதவுகள் முன்போலவே மூடப்பட்டிருந்தன. அரசரையும் தேவியையும் மனையிலுள்ளோர் தேடிப்பின்பு அரசரைமட்டுங்கண்டு, தேவியார் எங்கே? என்ன; அவர் "மகாலிங்க மூர்த்தியினிடத்திலிருக்கிறார்" என்றார். அவர்கள் ஆச்சரியமுற்று, பூசிப்பவர்களோடு உள்ளேபுகுந்து, மகாலிங்கப்பெருமான் முடிமீதுகை விளங்குதலைக்கண்டார்கள். சிவபிரான் உடனே அக்கையை உள்ளே வாங்கியருளினர். அதுகண்ட அரசர் மகிழ்ச்சி

யடைய; மற்றவர்கள் அச்சமும் அதிசயமுமடைந்தார்கள். தேவர்கள் புஷ்பமாரிபெய்தார்கள்.

இவ்வாறு பலநாள் இந்நகரில் வசித்துக்கொண்டிருந்து, மருதவாணர் கட்டளையின்படி தமது மதுராபுரியையடைந்து, சோமசுந்தரமூர்த்தி சிவலோகங்காட்டியருளத் தரிசித்து, பலநாளரசாட்சிசெய்து சிவபதமடைந்தனர்.

## ஹம்ஸத்துவசன் பேறுபெற்றது.

சோழநாட்டிலே, உறையூரிலே, நற்குணநற்செய்கை இயல்பாகவே அமைந்து அரசாண்ட ஹம்ஸத்துவசச்சோழனென்பவன், கங்காஸ்நாநம்பண்ணும் விருப்பமுள்ளவனாய்த் தான் சென்று படிந்துவரக்கூடாமையை நினைந்து வருந்தி, தனக்கு மித்திரனாகிய பிராமணனொருவனையழைத்து, "நீர் என்பொருட்டுச்சென்று, கங்காஸ்நாநம்பண்ணி, அப்பலனை எனக்குத் தருக" என்று பிரார்த்தித்தனன். அந்தப்பிராமணன், "எனது மனைவி இளையளாதலாலும், வேறு துணையில்லாமையாலும், நான் செல்லுதற்கு இயலாது" என்றனன். அரசன், "உமது மனைவியை நான்பாதுகாப்பேன்; நீர்கவலை யடையவேண்டாம்" என்று உறுதிமொழிகூறிப் போக்கி, சொன்னபடியே அவன் மனைவியைப் பாதுகாத்து வந்தனன். காசிக்குச்சென்ற அந்தணன் கங்காஸ்நாநஞ்செய்து, காவடிதாங்கி, உறையூரையடைந்து, மறுநாட்காலையில் அரசனைக் காணலாமென்று எண்ணி, அன்றிரவில் தன்மனைக்குச்சென்று, காசிக்குப்போய் வந்தவரலாறுகளை மனைவிக்குக்கூறிக்கொண்டிருந்தான். இங்கே இப்படியிருக்க, முன்போலப் பாதுகாத்தற்பொருட்டு இவ்வந்தணன் வீட்டின்புறம்பே

வந்த அரசன், இவ்வீட்டிற்குள் ஆடவர் சப்தம் ஏதென்று ஐயுற்று, அந்நியனொருவன் வந்திருக்கிறானென்று துணிந்து, கடுங்கோபங் கொண்டு, சுவரேறி, வீட்டினுள்ளேசென்று, தனது கையிலிருந்த வாளாயுதத்தால் அவனைக்கொன்று, பின்பு மித்திரனென்றறிந்து வருந்துகையில் பிரமகத்தி அவனைப்பற்றியது. பின்பு அரசன், அதனால் அளவில்லாததுன்பமுற்று, அதனை நிவிர்த்திசெய்தற்கு யாதொருவழியுங்காணாது தடுமாறி, சிலபெரியோர் ஆஞ்ஞாபநத்தின்படி ஸ்தலயாத்திரை செய்துகொண்டேவந்தான். அப்படி வரும்பொழுது இந்த ஸ்தலத்தையடைந்து, வருணதீர்த்தத்தில் ஸ்நாநம் பண்ணி, அங்குள்ள ஸ்ரீ கம்பகரேசரால் தனது நடுக்கம் முற்றுமொழிந்து, பின்பு புஷ்ய தீர்த்தத்திலும், காருண்யாமிர்தத்திலும் ஸ்நாநம்பண்ணி, கீழைக் கோபுரவாயில் வழியாகத் திருக்கோயிலுக்குள்ளேசெல்லுகையில், பிரமகத்தி கோபுரத்திற்குவெளியே நின்றுவிட்டது. பின்பு அரசன் உவப்புற்று, சுவாமிதரிசனஞ்செய்து பலபணிகளியற்றி, பலவரங்கள்பெற்று, தன்னகரடைந்து வாழ்வுற்றான்.

## வீரசேனன் பேறுபெற்றது.

தாம்பிரபர்ணி தீரத்திலுள்ள ஒருநகரின் அரசனாகிய வீரசேனனென்பவன், வேட்டையாடும்பொழுது மிருகத்தைக் குறித்து எய்தபாணங்களுள் ஒன்று குறிதப்பிச்சென்று, ஒரு பிராமணனைக்கொன்றது. பின்பு அரசன் பிரமகத்தியாற் பிடியுண்டு வருந்தி, இந்தஸ்தலத்தை யடைந்து, புஷ்யதீர்த்தத்தில் ஸ்நாநம்பண்ணி, திருக்கோயிலுக்குள்ளே செல்லுகையில் பிரமகத்தி நீங்கி முன்

னவற்றோடு கூடியது. பின்பு அரசன் சுவாமி தரிசனஞ்செய்து தனது நகரத்தையடைந்தான்.

## சித்திரகீர்த்தி பாண்டியன் மகப்பேறுற்றது.

பாண்டிநாட்டில், மதுராபுரியில், முன்னம் அரசாண்ட சித்திரகீர்த்தி பாண்டியன், புத்திரனில்லாமையால் மனம்வருந்தி, சாபாலி முனிவரால் தனது பூர்வஜன்ம விர்த்தாந்தந்தெரிந்து, அவரால் ஏவப்பட்டு, இந்தஸ்தலத்தை அடைந்து, காருண்யாமிர்தத்திலும் புஷ்ப தீர்த்தத்திலும் ஸ்நானம்பண்ணி, மருதவனேசரைத் தரிசித்து, சிலநாளில் நல்புத்திரனைப்பெற்று, பின்பு பலநாளிந்த ஸ்தலத்தில் வஸித்துக்கொண்டேயிருந்து, மருதவாணர்க்குப் பங்குனித்திருவிழாச் செய்வித்துத் தன்னகரடைந்தான்.

இன்னும் ஸ்ரீமகாலிங்கப்பெருமான், ஒருகாலத்தில் பொதியிலிருந்த உலர்ந்தமீன்கள் உயிர்பெற்றுத்துள்ளித்தடாகத்திற்குதிக்கும்படி யருளினர். செங்கல்லைப்பொன்னாக்கினர், தனக்குப்புத்திரனில்லாமையால் சுவர்ணத்தாற் பிரதிமையொன்று செய்வித்து, அதைப் புத்திரனகப்பாவித்துப் பாராட்டிக்கொண்டிருந்த ஒருசோழன் பிரார்த்திப்ப; அப்பிரதிமைக்குயிரளித்து, உயிர்பெற்ற அப்பொன்னுருவச் சோழனுக்கு உடனே முக்தியளித்து, அச்சோழனுக்கு மகப்பேறளித்தார், ஒரு சிவயோகியினுடைய ஆகாரசேஷம் புசித்துவந்த நாயொன்றை, பூர்வஞானத்தோடு இராஜகன்னிகையாகப் பிறக்கும்படிசெய்து முக்தியளித்தார். தமது குரு, மரணகாலத்தில் தரையிலெழுதிய மகாவாக்கியத்தை ஒரு கழைக்கூத்தப்பெண் ஓலையிலெழுதிக் காதிற்போட்டுக்கொள்ள, அதைப்பெறுதற்பொருட்டு

அவனுக்குப் பலநாள் அடிமைவேலைசெய்து, அதைப்பெற்ற திரியம்பகரென்னும் ஒரு வேதியர்பெருமான், இந்தப்புஷ்யதீர்த்தத்தில்ஸ்நாநம்பண்ணத் தொடங்கியபொழுது, வேதியர்கள், "ஸ்வாமீ! இவர் தைப்பூசமாடல் தகுமோ" என்று வினவ, "திரியம்பகன் தைப்பூசமாடல் தகுந்தகுந் தகும்" என்று முக்கான்மொழிந்தனர். இன்னும் மருதவாணரது திருவிளையாடல் பலவுள்ளன. ஈண்டு விரிப்பிற்பெருகும்.

## பிரதக்ஷிணமகிமை.

க-வது. அசுவமேதப்பிரதக்ஷிணம். இது திருக்கோயிலினது வெளிமதிலினுள்ளாக வலம்வருதலாம். இதன்மகிமைகளைப் பின்வரும் பாடல்களா லறிக.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

அதினுற் றிசைவலம் வருவோர் பெறுவர்க ளணிநீ டிலகிடு முயர்செல்வம், மதிநன் குறுவர்கண் மகவுற் றிடுவர்கண் மருவார் தமைவென் றிடுவார்கள், சதிர்பெற் றிடுவர்கள் பிணியற் றிடுவர்கள் சகமெச் சுறுவர்க ளிவையன்றிப், பதமொன் றவணுறு மதனுக் கியல்புறு பரிமே தப்பல னடைவார்கள். (க)

மகரா லயம்வளை தருமிப் புவிதனை வலம்வந் திடினுறு வதுமெய்தும், புகழ்வா ரணமுக விறைவே லவன்மறை புகல்வோ ரநுமதி முனமெய்தி, மிகுமா தரவொடு செயினெய் திடுபயன் விரைவெய் திடும்வெங் கொலையாதி, இகழ்பா தகவினை யவர்செய் தனவுள யாவுந் தெருமர லுடனேகும். (உ)

வருநா ளொருமண் டலமரை மண்டல மருவொரு காண்மண் டலவெல்லே, ஒருநா ளிருபதின் மேலா திருதொகை யோரே ழெனு மூன் றினுளொன்று, கருதா வவரவர் வன்மைக் கிசைதரு கணிதம் பெறவந் திடல்வேண்டும், ஒருவா றதில்வல னுற்றோர் களைவந் துழி வந் துழியறை கிற்பாமால். (௩)

தையா மிணைமலர் குவியா மனமொடு கருணைத் திருமுக மலர் வெய்த, மெய்யா லொருவலஞ் செய்வா ரதனிடை வினைநீத் துள மெண்ணிய வெய்திப், பையா டரவணி யெம்மா னுறைதரு பதியுற் றுறைவர்கண் மகிழ்வோடு, தையா மதியினில் விழவிற் புரிதரு தகையோர் பெறுபலன் புகல்வார்யார். (௪)

இந்தப் பிரதக்ஷிணஞ்செய்து பேறுபெற்றோருள்ளே

சிலர் சரித்திரம் வருமாறு :—

(க.) சூரியகுலத்தரசனாகிய யுவனாசுவன்மகப்பேறுகருதி, தன துகுருவாகிய வசிஷ்டமுனிவரோடு இந்த ஸ்தலத்தையடைந்து, புத் திரகாமேஷ்டியாகஞ்செய்து, தன்மனைவிக்குக் கருப்பமுண்டாதற் பொருட்டு அம்முனிவர் மந்திரித்துவைத்த தீர்த்தத்தைத் தா. மிகுதியால் அறியாமலுண்டு, கருப்பமடைந்து, கருப்பசிசு வயிற்றை க்கிழித்துக்கொண்டு வெளிப்பட்டமையான் மூர்ச்சை யடைந்து விழுந்து, ஆயுள்வேதியர்கள் கிழிந்த அவ்வயிற்றைப் பொருத்தித் தைத்துப் பலமருந்து இடுதலால் மூர்ச்சைதெளிந்து, அவ்வயிற் றுப்புண் ஒன்றுலும் தீராமையால் இந்த அசுவமேதப் பிரதக்ஷிண ஞ்செய்து, அது ஆறப்பெற்று, பின்பு வசிஷ்டமுனிவரோடும், குழந்தையோடும் மற்றவர்களோடும் தனது நகரடைந்து இன்பு ற்றிருந்தான்.

(௨.) மேற்கூறிய யுவனாசுவனுடைய வயிற்றைக்கிழித்து வெளிப்பட்ட மாந்தாதா, தனக்குத்திறைகொடாத கலிங்கதேசத்தரசனோடு போர்செய்து, புறங்கொடுத்தோடிய அவ்வரசனைக்கொன்று, பழியடைந்து சோர்வுற்று, வசிஷ்டமுனிவரால் அறிவுறுத்தப்பட்டு, இந்தப்பிரதக்ஷிணஞ்செய்து, மருதவாணர்க்கு வசந்த மஹோத்சவத் திருக்கல்யாணம் புரிவித்து, விளைநில முதலியவற்றை ஈந்து, சிவபெருமான் ஆகாசவாணியால், "அரசனே! உனதுபாவம் நீங்கியது. நீ நகரமடைந்து அரசுபுரிக. பின்பு நமதுலகடைக" என்று கூறியருளக்கேட்டு, நகரடைந்து, பலநாளரசாண்டு, சிவாஞ்ஞையின்படி சிவலோகமடைந்து பேரின்பமுற்றான்.

(௩.) தொண்டைநாட்டிலே, ஸ்ரீ காஞ்சிபுரத்திலே, முன்னே அரசாண்டுவந்த வசுமானென்னும் ஓரரசன், கங்காஸ்நாநத்திற்குச் சென்றனன். அப்பொழுது, அவனது நாட்டைப் பகைவர் அபகரித்துக்கொண்டனர். அரசன் கேட்டுக் கவலையுற்று, சாபாலிமுனிவரையடைந்து, தனது குறையைக்கூறினன். அம்முனிவர் "அசுவமேதஞ்செய்" என்றுகூற, அரசன் "பொருளில்லாமையால் என்னாலியலாது" என்றனன். பின்பு அம்முனிவர், "திருவிடைமருதூரையடைந்து, அசுவமேதப் பிரதக்ஷிணஞ் செய்வாய் என்றனர்." அரசன் அப்படியே அங்கடைந்து, சிவபிரானைவணங்கி, விதிப்படி இந்தப் பிரதக்ஷிணஞ்செய்து, பராக்கிரமமுடையவனாய், பகைவரை வென்று, அவர் நாட்டைக்கவர்ந்து, அதை மருதவனேசருக்கு அர்ப்பணஞ்செய்து, மார்கழிமாசத்து உற்சவமு நன்குபுரிவித்து, தன்னகரடைந்து வாழ்ந்து, அந்தத்திற் சிவகதியுற்றான்.

௨-வது. கொடுமுடிப்ராகாரம்:—இது அசுவமேதப்பிரதக்ஷிணத்திற்கு உள்ளேயுள்ளது. பரமசிவன் கட்டளைப்படி வரகுண பா

ண்டியராற் கட்டுவிக்கப்பட்டது. இதைப் பிரதக்ஷிணஞ்செய்தல், கைலாசகிரியைப் பிரதக்ஷிணஞ்செய்தலோடொக்கும். தேவகணத்தினர் யாவரும், தினந்தோறும் இதைச்சூழ்ந்துவருவார்கள். இதைப் பிரதக்ஷிணஞ்செய்வோர்க்குப்பிணி, தரித்திரம், பாவங்கள் நீங்கும்; ஆரோக்கியம், செல்வம், புண்ணியங்களோங்கும். ஞானம்வளரும்; அஞ்ஞானந்தளரும். புகழ்கூடும்; இகழ் ஓடும்.

ரு-வது. ப்ரணவப்ராகாரம். இது கொடிமுடிப்ராகாரத்திற்கு உள்ளே யுள்ளது. இது பிரணவப்ராகாரமென்பதற்கு அடையாளமாக இப்பொழுது நாதோத்பத்தி வழங்கிவருகின்றது.

## நாரதமுனிவர் வழிபட்டது.

நாரதமகாமுனிவர் ஒருகாலத்தில் சத்தியலோகத்தையடைந்து, பிரமதேவரைவணங்கி, "ஸ்வாமீ! உலகத்திலே சிவஸ்தலங்கள் எவ்வளவுள்ளன? அவற்றுள் சிறந்தன எவை? அருளல்வேண்டும்" என்று பிரார்த்திக்க, பிரமதேவர் மகிழ்வுற்று, "அநேககோடி ஜன்மத்திலே செய்த பெரும்புண்ணியத்தாலேயே கிருபாசமுத்திரமாகிய பரமசிவனது மகிமைகளைக்கேட்பதற்கு ஒருவருடைய மனம் விரும்பாநிற்கும்; ஆதலால், நீர் பெரும்புண்ணியமுடையீர். சொல்லுதலால், யானும் பெரும்புண்ணியமுடையேன்" என்றுசொல்லுகின்றார்:—

"முனிபுங்கவ! பூமியினிடத்து அளவில்லாத சிவஸ்தலங்கள் உள்ளன. அவற்றுள்ளே ஏழாயிரத்துநானூறும், அவற்றுள் ஆயிரத்தெட்டும், அவற்றுள் நூறும், அவற்றுள் அறுபத்தெட்டும், அவற்றுள் இருபத்துநான்கும், அவற்றுள் எட்டும் சிறந்தனவாம். அவ்வெட்டு ஸ்தலங்களாவன:—திருக்கைலாசம், ஸ்ரீ அருணசலம், ஸ்ரீ காசி,

திருக்காளத்தி, திருவாலவாய், ஸ்ரீ சிதம்பரம், திருவாரூர், திருவிடைமருதூர். அந்த எட்டனுள் திருவிடைமருதூர், ஆதிசக்தியின் ஹிர்தயகமலமத்தியமாய் விளங்காநிற்கும். அநாதியாகிய அந்தஸ்தலத்தை உமாதேவியாருக்குக் காண்பித்தற்பொருட்டு, மகாதேவர், திருக்கைலாயத்தினின்றும் முன்னொருகாலத்தில் எழுந்தருளினர். அவர் வருமுன்னமே அந்தக் கைலையங்கிரி அந்த ஸ்தலத்தில் மருத விர்க்ஷமாகிநின்றது. அந்த விர்க்ஷத்தைத் தரிசித்தாற் கைலாசத்தைத் தரிசித்தபலனும். அதனை வலஞ்செய்தாலும், பணிந்தாலும், பூசித்தாலும், கைலைக்குச்செய்தல்போலாம். அந்த மத்தியார்ச்சுனத்திற்பிறந்தாலும், இறந்தாலும், க்ஷணப்பொழுது தங்கினாலும், அதன் மகிமைகளைப்படித்தாலும், அதைத் தரிசித்தாலும், நினைத்தாலும், ஒருவன் எல்லாத் துன்பத்தினின்று நீங்கி, சிவசாயுச்சியத்தையடைவான். அன்றியும் யஜமானன், பிதா, மாதா, குரு இவர்களுக்குச்செய்த அபராதங்களும், அந்தஸ்தலத்தையடைதலால் நீங்கும். முன்னம், வரகுணபாண்டியரையும், ஹம்ஸத்துவசச்சோழனையும் வேமுராரசனையும்பற்றி மிகவும் வருத்திய கொடிய பிரமகத்திகள் அந்த ஸ்தலத்தால் நீங்கின. அதில் உள்ள புண்ணிய தீர்த்தங்களுக்கு அளவில்லை. அவற்றிற்செய்த அணு புண்ணியமும் மேரு அளவாகவளரும். முற்காலத்தில் விபண்டகமுனிவர், பலமுனிவர்களோடும் இருபத்துநான்கு சதுர்யுகம், அந்தஸ்தலத்தில் தவஞ்செய்து, சிவசாயுச்சியத்தையடைந்தனர். பின்பு நானும் அந்த ஸ்தலத்தையடைந்து, ஸ்ரீ மகாலிங்கமூர்த்தியைப் பூசித்து, பங்குனித்திருவிழாவும் நடத்தினேன். என்னைப்போன்ற அநேக பிர்ம்மாக்களும், அவர்களைப்பெற்ற அநேக அச்சுதர்களும், அந்த ஸ்தலத்தையடைந்து, பசுபதியைத்தரிசித்துத் தத்தமக்கு வேண்டிய பயன்களைப் பெற்றார்

கள். இன்னும் அந்த ஸ்தலத்தில், அசுவமேதப் பிரதக்ஷிணமென்று ஒன்றுண்டு. அதில் பிரதக்ஷிணஞ்செய்தால் குருடன் கண்பெறுவன். வறியன் செல்வமடைவன். குஷ்டம் க்ஷயம் முதலிய ரோகங்களெல்லாம் நீங்கும். பைசாசங்களெல்லாம் ஏங்கும். அந்தப் பிரதக்ஷிணஞ்செய்து பேறுபெற்றோர் பலர். அதன் பெருமையை அநேகம் நாவுடையோர் ஒருவாறு சொல்லலாமேயன்றி, நான் சொல்லுதற்கு உரியேனு? அங்கெழுந்தருளிய ஸ்ரீ மஹாலிங்கமூர்த்தியினது திரவியங்களுள், அணுவளவேனும் ஒருவன் அபகரிப்பானாயின், அவன் எல்லாநரகத்துன்பமுமடைந்து, பின்பு நூறு சண்டாளஜன்மமெடுத்து, அதன்பின்பு நூறு நாய்ப்பிறப்புற்று, பின்பு புழுவாய்ப் பிறப்பான். இது நிச்சயம் நிச்சயம். இதற்கு ஒருகதைசொல்வேன்:—

சம்பகாவதியென்னும் பெயரையுடைய ஒரு நகரத்திலுள்ள அதிசிலனாகிய விரதனென்னும் வேதியனொருவனுக்குப் பாபத்தால் தேவவிரதனென்று ஒருபுத்திரன்பிறந்தான். விரதன் உரியகாலங்களிலே அவனுக்கு ஜாதகன்மாதிகளை முறையேநடத்தி, வேதாத்தியயனஞ்செய்வித்து வருகையில், ஒருநாள் தான் சொல்லியதைப் புத்திரன் உட்கொள்ளாமையால் அவனைக் கோபித்தான். உடனே தேவவிரதன் தகப்பனைப் புடைபெயராவண்ணந் தூணோடுசேர்த்து இறுகக்கட்டிவிட்டு, அவ்வூரைவிட்டுப் புறப்பட்டு, பல கீழ்மக்களோடுங்கூடி, பல இடங்களிற் களவுசெய்து, பின்பு திருவிடைமருதூரையடைந்தான். அடைந்ததினம் திருவிழாக்காலமாதலால், ஸ்ரீ ஏகநாயகப்பெருமான் உமாதேவியோடு எல்லா ஆபரணமுமணிந்து திருவீதியி லெழுந்தருளினர். அப்பொழுது யாருந்தரிசித்துக் கண்படைத்த பயன்பெற்றார்கள். அந்தத் தேவவிரதன், சுவாமி

யினுடைய திருமேனியிலும், அம்பிகையின் திருமேனியிலுமுள்ள திருவாபரணங்களை யெல்லாம் நோக்கி, இவைகள் கிடைத்தால் எவ்வளவோ செய்துகொள்ளலா மென்றும், இவைகளைமட்டும் அபகரிப்பது விசேடமன்று; இன்னும் சேமத்திலுள்ள ஆபரணங்களை யெல்லாங் கவர்ந்தால் எவ்வளவோ நன்மை யடையலாமென்றும், இவற்றைக் கவர்வதற்கு இவ்வாலயவிசாரணையை எப்படியாவது பெறவேண்டுமென்றும், தன்னைச்சூழ்ந்துநின்ற திருடர்களுக்கும் தூர்த்தர்களுக்குங்கூறி, அதிகாரம் பெறுதற்பொருட்டு அரசனையடைந்து, அவனை மகிழ்வித்து, "இந்தக்கோயில் விசாரணைசெய்வதற்கு எனக்கு அதிகாரங்கொடுத்தால் மிகச்செவ்வையாக நடத்துவேன்" என்றுகூறி, அதிகாரம்பெற்று, அந்தஸ்தலத்துத் திருவீதியிலுள்ள மனையொன்றிற்றங்கியிருந்து, எல்லாஆபரணங்களையும் ஒருங்கேகவர்ந்து போவதற்குச் சமயம்பார்த்துக்கொண்டே அதிகாரஞ்செய்து வருநாளில், அவனுக்கு வலப்புறத்தில் ஒருபிளவையுண்டாயிற்று. அதில் ஈமொய்யாதபடி ஆலயத்துள்ளே ஒரு திருவிளக்கிலிருந்த நெய்யில் ஒருதுளியெடுத்து, அப்பிளவையின்மீது தடவி, தன்மனைக்குச் செல்லுகையில் ஒருபாம்புகடிக்க அவனிறந்தான். அக்கொடியபாவியை யமகிங்கரர் பிடித்துக்கட்டிக் கொண்டுபோய், இருபத்தெட்டுக்கோடி நரகிலும் வீழ்த்தி, வெகுகாலம்வருத்தியபின்பு அவன் நூறுசண்டாள ஜன்மத்தையடைந்து, பின்பு நாய்ச்சன்மம் நூறடைந்து, பின்பு அந்தத்திருவிடை மருதூரில் மலப்புழுவாய் ஜனித்துக்கிடந்தனன். அக்காலம் பூசவிழாவாதலாற் பூசத்துறையில் ஸ்நாநம்பண்ணின ஒருபிராமணன், கூட்டத்திற்செல்ல முடியாமல் ஒதுங்கியபொழுது அவன்பாதம் புழுவின்மேற்பட்டது. படவே அப்பாதம் பூசதீர்த்த ஸம்பந்தமுள்ளதாதலால், அவன் அப்

புழுவடிவமொழிந்து, தேவருருவம்பெற்று, அரம்பையரிருபுறத்து ஞ்சாமரைவீச, விமானமேறி வானுலகடைந்து, அளவற்ற இன் புற்று வீற்றிருந்தான்.

ஆதலால், சிவத்துரோகம் பொல்லாது! பொல்லாது!!'' என்று கூறக்கேட்டு, நாரதமுனிவர், "ஸ்வாமீ! அந்தஸ்தலத்தை யடையு முறையையும், அடைந்து அங்கேசெய்வனவற்றையும், ஆங்குள்ள தீர்த்தங்களில் ஸ்நாநம்பண்ணுங் கிரமத்தையுங் கூறியருளல் வேண்டும்'' என்றுபிரார்த்தித்து, பிரமதேவர் அவற்றை முறையே கூறக்கேட்டு, விடைபெற்று, இந்தஸ்தலத்தை யடைந்து, விதிப்படி எல்லாத் தீர்த்தங்களிலும் ஸ்நாநம்பண்ணி, சுவாமி தரிசனஞ்செய்து, பூசவிழாவுந் தரிசித்துப் பேராத பேரானந்தமுற்றனர்.

இந்த மகாசரித்திரத்தைக் கேட்ட சவுனகாதிமுனிவர்கள், சூத முனிவரோடும் இந்தஸ்தலத்தையடைந்து, ஸ்ரீ மகாலிங்கமூர்த்தியையும், ஸ்ரீ பிருகத்சுந்தரகுசாம்பிகையையும் வழிபட்டு, பெரும்பேறு பெற்றனர்.

போற்றலுறு மருதவனப் புராணமென்னப்புகலிதனைப் படிப்பவர்கள் கேட்போர் யாரும், மாற்றரிய வினையினொடு பகையை வென்று மன்னுநெடுஞ் செல்வமொடு மகவு மெய்தித், தேற்றமுறு புவியினிடை நீடு வாழ்ந்து திகழுறுவிண் ணுலகில்வள ரின்பந் துய்த்துச், சாற்றலுறு பரஞான மருவி யீசன் சரணபங் கயநிழல்வீற் றிருப்பர் மன்னே.

மத்தியார்ச்சுனமான்மியம் முற்றுப்பெற்றது.

மெய்கண்டதேவன் திருவடிவாழ்க.

உ

திருச்சிற்றம்பலம்.

இந்த மத்தியார்ச்சுனத்திற்குரிய தேவாரப்பதிகங்களும், திருவிசைப்பாப்பதிகமும், பிரபந்தமும் வருமாறு:—

## தேவாரம்.

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

| | | |
|---|---|---|
| ஓடேகலன் | ... | தக்கராகம். |
| தோடொர்காதினன் | ... | குறிஞ்சி. |
| மருந்தவன் | ... | வியாழக்குறிஞ்சி. |
| நடைமருதிரிபுரம் | ... | ,, |
| விரிதருபுலியுரி | ... | ,, |
| பொங்குநூன் மார்பினீர் | ... | காந்தாரம். |

### திருநாவுக்கரசு நாயனார்.

| | | |
|---|---|---|
| பாசமொன்றிலராய் | ... | திருக்குறுந்தொகை. |
| பறையினோசையும் | ... | ,, |
| காடுடைச் சுடலைநீற்றர் | ... | திருநேரிசை. |
| சூலப்படையுடையீர் | ... | திருத்தாண்டகம். |
| ஆறுசடைக்கணிவர் | ... | ,, |

### சுந்தரமூர்த்தி நாயனார்.

| | | |
|---|---|---|
| கழுதைகுங்குமந்தான் | ... | தக்கேசி. |

## திருவிசைப்பா.

### கருவூர்த்தேவர்.

| | | |
|---|---|---|
| வெய்யசெஞ்சோதி | ... | பஞ்சமம். |

---

பட்டணத்துப்பிள்ளையார் மும்மணிக்கோவை.

---

உ

சிவமயம்.

# ஸ்ரீ ஏகநாயகரூசல்.

---

சீர்பூத்த நான்மறையா கமங்கள் வாழத்
திருநந்தி கணங்களென் றுஞ் செழித்து வாழத்
தார்பூத்த சித்தாந்த சைவம் வாழத்
தமிழ்மறையு மைந்தெழுத்துந் தழைந்து வாழப்
பேர்பூத்த மறையவரோ டடியார் வாழப்
பெரும்பொன்னித் திருநாடு பிறங்கி வாழ
ஆர்பூத்த விடைமருதங் கோயி லாக்கொண்
டமரேக நாயகரே யாடி ரூசல். (க)

மாமேவு புகழ்வீர சோழ னுற்று
மணிமதில்சூழ் திருக்கோயி லிடையின்மேவும்
தூமேவு மலங்கார மண்ட பத்திற்
றுலங்குமணிப் பொன்னூச லிலங்க மேவிப்
பூமேவு பெருநலமா முலையா ளோடும்
பொன்னனைய மேனியினீ ராடி ரூசல்
தேமேவு மருட்கடலே யாடி ரூசல்
திருவிடைமா மருதுடையீ ராடி ரூசல். (உ).

தளம்பூத்த நறுங்கொன்றைத் தாம மாடத்
தடந்திரைமந் தாகினியாந் தைய லாடக்

குளம்பூத்த விழியாடக் குழைக ளாடக்
குலவுமணிப் பூம்பணிகள் குலவி யாட
வளம்பூத்த பல்லுயிரும் வருந்தா தீன்று
வளர்த்தருளுந் தாய்மருங்கின் மகிழ்வுற் றாட
உளம்பூத்த விடைமருத ராடி ரூசல்
உவந்தேக நாயகரே யாடி ரூசல். (௩)

இந்திரனுஞ் சசியுமொரு வடந்தொட் டாட்ட
இந்திரையு முகுந்தனுமோர் வடந்தொட் டாட்டச்
சந்திரனேர் தவளசரோ ருகத்து மேய
தையலுநான் முகனுமொரு வடந்தொட் டாட்ட
அந்தரநாட் டவர்களொடு மரம்பை மாரும்
அகமகிழ்ந்து போற்றியொரு வடந்தொட் டாட்ட
மந்திரமா விடைமருதங் கொண்டுவாழும்
மகாலிங்க நாயகரே யாடி ரூசல். (௪)

ஒருஞானப் பாலருந்தி யம்பொற் றாளம்
ஒண்டரளச் சிவிகைபந்தருவந்து பெற்றோர்
தருஞானத் தைப்பூசங் காண்பா யென்று
தவளவென்பைப் பெண்ணாக்கித் தந்தவெங்கோன்
திருஞான சம்பந்தச் செல்வ ரோதுஞ்
செந்தமிழ்மா மறையன்பர் தெரிந்து பாட
அருஞானத் திருவுருவி ராடி ரூசல்
அருண்மருத வாணரே யாடி ரூசல். (௫)

புடைமருதப் பெருந்துறையி லருள்பெற் றென்றும்
பூசையறு காலத்தும் வழாம லாற்றி
இடைமருதா நந்தத்தே னென்றே யன்பின்
ஏத்துபிரா னருளுச லடியார் பாட
அடைமருதக் கிளிமொழியோ டாடி ரூசல்
அனைத்துயிரும் புரந்தருள்வீ ராடி ரூசல்
இடைமருத நாயகரே யாடி ரூசல்
ஏகநா யகப்பெருமா ளாடி ரூசல். (௬)

அரசரெலா மடிவணங்க மதுரைகாத்த
அண்ணல்வர குணதேவற் கச்ச நீங்க
விரசுபழி யோட்டியர லோகங் காட்டு
மேன்மைதனை மெய்யன்பர் வியந்துபாடப்
பிரசமலர்த் தொடையசைய வாடி ரூசல்
பிறையணிந்த செஞ்சடையீ ராடி ரூசல்
இரசதவெண் கிரியுடையீ ராடி ரூசல்
இடைமருத வாணரே யாடி ரூசல். (௭)

தேனுடு நறுங்கொன்றைத் தொடைய லாடத்
தெளிபுனற்கங் காநதியின் றிரைக ளாட
மானுடத் திருக்கரத்து மழுவு மாட
மாரனிளந் தென்றலந்தேர் மருவி யாட
வானுட மண்ணுட வனைத்து மின்ப
வாரிபடிந் தாடவுமை மருங்கின் மேவித்
தானுடத் தருமமெலாந் தழைவுற்றுடத்
தயங்குமிடை மருதரே யாடி ரூசல். (௮)

வரையரையன் மேனையொடு மகிழ்ந்து காண
வரைந்தாடுந் திருவூச லாட்டுங் கூடல்
அரையன்மலை யத்துவசன் மனைவி காண
அன்றாடுந் திருவூச லாட்டுங் காணப்
புரையுடையேங் கண்டுய்ய வாடி ரூசல்
புண்ணியவெள் விடையுடையீ ராடி ரூசல்
தரைசெய்தவப் பயனாய மருத நீழல்
தங்கியருள் செல்வரே யாடி ரூசல். (கூ)

பொருவிடைவா கனமுடையீ ராடி ரூசல்
பொங்கரவப் பூணுடையீ ராடி ரூசல்
கருவிடையாம் புகுந்தூச லாடா வண்ணங்
காத்தருளும் பெருமானே யாடி ரூசல்
மருவிடையர் குலந்தழைப்ப வருமா னுயர்
வடித்தவிசை கொளுஞ்செவியீ ராடி ரூசல்
திருவிடைமா மருதுடையீ ராடி ரூசல்
தேவாதி தேவரே யாடி ரூசல். (க0)

உ

சிவமயம்.

# ஸ்ரீ ஏகநாயகர் தாலாட்டு.

௧. சீர்மலிந்த கல்வியொடு செல்வமுமேன் மேல்வயங்கி
யேர்மலிந்த மாட விடைமருத நாயகரோ.

௨. எல்லாத் தலத்து மிடைமருதே மேலாமென்
றெல்லா மளித்தாட் கியம்பியருண் மாமணியோ.

௩. வாய்ந்த கயிலை வடிவா மருதநிழல்
ஏய்ந்த வுமையோ டெழுந்தருளி வாழரசோ.

௪. மாகா ரிருளினிடை வந்தே யுருத்திரர்கள்
ஏகா தசரு மிறைஞ்சவெளிப் பட்டவரோ.

௫. மாதுமையாள்பன்னாட்செய்மாதவங்கண் டன்னாண்முன்
சோதிமகா லிங்கமாய்த் தோன்றியருள் சின்மயரோ.

௬. கோனேயென் பார்தெளிந்து கொண்டாடு மாறுதன்னைத்
தானே யருச்சித்த தண்கருணை வாரிதியோ.

௭. காக மொருதடத்தின் கட்படிய மற்றதன்றன்
ஆசம் பசும்பொன்னா வாக்கியரு ளாரமுதோ.

௮. பணவரவம் பூணும் பரனேயென் றாண்ட
கணபதிபூ சிக்கக் கவினு முதற்பொருளோ.

௯. மாட்சி யுரோமசன்றன் மாதவங்கண் டன்னையொடு
காட்சிகொடுத் தன்னான் கவலை கடிந்தவரோ.

௧௦. இலங்கு குறுமுனிவ னென்றுவரு மென்று
நலங்கொ ளவன்வரவை நாடியுறை நாயகமோ.

௧௧. மண்ணைக்கொ டேலென்று மாவலிக்குச் சொற்றவன்றன்
கண்ணைக் கொடுத்தவனைக் காத்தருளுங் கற்பகமோ.

௧௨. இன்பகற்று பாவத் திடைப்பட்டோர் மூழ்கினவர்
துன்பகற்று பூசத்துறையாடுஞ் சுந்தரமோ.

௧௩. சீமான் வரகுணப்பேர்த் தென்னவன்றன் காதலியைக்
கோமானீ கொள்ளெனவே கொண்டகுணக் குன்றமோ.

௧௪. அல்லார்களத்தா யருளென்பார் காதலித்த
வெல்லா மருளு மிடைமருத மார்கரும்போ.

௧௫. தேனே சுவையமுதோ தித்திக்குஞ் செய்யகனி
தானே மலைபயந்த தையலா ளாருயிரோ.

௧௬. பிரமகத்தி மூன்றும் பெரும்பாவ நீக்கி
வரமளித்து மன்னுயிரை வாழச்செய் மாமணியோ.

௧௭. பிணிக்கோதில் பூம்புகார்ப் பிள்ளையார் சொன்மும்
மணிக்கோவை கொண்டு மனமகிழ்ந்த வள்ளலோ.

௧௮. வயமேவச் சூழ்வோர்கள் வைக்குமடி யொன்றற்
கயமேதப் பேறருளு மாரருட்சிந் தாமணியோ.

௧௯. தெய்வமில்லை யென்னுஞ் சிதடர்சட வாய்மூடச்
செய்வாத னாகியநந் தெய்வ சிகாமணியோ.

௨௦. நீதஞ்ச மென்றவர்க்கா நீடுகம லைத்தெருவிற்
பாதஞ் சிவக்கப் பரவைமனை சென்றவரோ.

# ஸ்ரீ ஏகநாயகர் தாலாட்டு.

௨௧. விண்ணவரும் பாதலத்தின் மேயவரு மெண்டிசையின்
கண்ணவரு நந்தவத்தைக் காதலிக்க வந்தவரோ.

௨௨. காவணங் காட்டுங் கடிமனையிற் சுந்தரரை
ஆவணங்காட்டி யடிமைகொண்ட வந்தணரோ.

௨௩. திருந்தடியைப் போற்றிசெயுஞ் செல்வரைமுன் கோலக்
குருந்தடியி லாண்ட குரவர் சிகாமணியோ.

௨௪. நந்தா வுலகநடுங்கா வணஞ்சடையில்
மந்தா கினியை மணந்தமண வாளரோ.

௨௫. மன்னுயிர்கள் யாவும் வயங்குவனா மென்பதைமுன்
றென்னன்பிரம்படியாற்றேற்றுவித்த மெய்ப்பொருளோ.

௨௬. கானந் தனில்விசயன் காண்டீபத் தாலடியுண்
டூனந் தவிர்படையோன் றீந்தருளு மெம்மானே.

௨௭. துங்கத் தமிழ்மொழியின் றூய்மையெவ ரும்மறியச்
சங்கப் புலவரிடைத் தங்கியரு ணாவலரோ.

௨௮. செயிரா வனவனைத்துந் தீர்த்தருளும் பொன்னி
யயிரா வணத்துறையி லாடியரு ளங்கணரோ.

௨௯. ஆரா வமுதோ வருட்கடலோ வெம்முடைய
தீராத துன்பமெலாந் தீர்க்குஞ் சிவக்கொழுந்தோ.

௩0. கருது மடியார் கவலையெலாம் போக்கி
மருத நிழலினிடை வாழ்ந்தருளு மாமணியே.

சிவமயம்.

vasantorcavat

# திருக்கல்யாணவரலாறு.

---

ஸ்ரீ அகஸ்தியமுனிவர், இந்தக்ஷேத்திரத்தில் முன்னம் காசிபர் முதலிய முனிவர்களுக்குச் சிவதத்துவத்தை உபதேசித்து, அவர்களோடு அம்பிகையைக்குறித்துத் தவஞ்செய்து அருள்பெற்று, அந்த அம்பிகையோடும் முனிவர்களோடும் சிவபெருமானைக்குறித்துத் தவஞ்செய்துகொண்டிருக்கையில், சிவபிரான் ஏகநாயகமூர்த்தியாய் அவர்களுக்குக் காட்சி கொடுத்து, "உங்களுக்கு வேண்டிய வரங்களைக் கேளுங்கள்" என்று திருவாய் மலர்ந்தருள; முனிவர்கள் யாவரும் தத்தமக்கு வேண்டியவாறே வரங்களைப்பெற்று உய்ந்தார்கள். அகஸ்தியமுனிவர், "ஸ்வாமீ! தேவரீரோடுஅநந்நியராய் விளங்கும் உமாதேவியார், பர்வதராசனுடைய வேண்டுகோளின்படி அவனுக்குப்புத்திரியாக அவதரித்துத் தவஞ்செய்தபொழுது காட்சிகொடுத்து, அவ்வுமாதேவியாரைத் திருக்கல்யாணஞ்செய்து, ஸ்ரீஸ்கந்ததேவரைப்பெற்று, அவரால் ஹரிப்பிர்ம்மாதி தேவர்களுக்குச் சம்பவித்திருந்த துன்பங்களைமாற்றி இரக்ஷித்தருளினீர். அவ்வாறே இந்த ஸ்தலத்திலும் தேவரீருடைய ஆஞ்ஞையினாலே பிரிந்து, தவம்புரிந்து காட்சி பெற்ற உமாதேவியாரைத் திருமணஞ்செய்து, காட்சியளித்து, அடியேங்களை இரக்ஷித்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்தார். சிவபெருமான் அப்படியே வைசாக மாசத்தில் உத்தர நக்ஷத்திரத்தில் அம்பிகையைத் திருக்கல்யாணஞ்செய்து, அகஸ்தியமுனிவருக்கும் மற்றமுனிவர்களுக்கும் காட்சி கொடுத்தருளினார்.

பின்பு சூரியகுலத்தரசனாகிய மாந்தாதா என்பவன், பெரியோர்கள் சொல்லவறிந்து, வஸந்தோத்சவத்தின் ஆறாந்திருநாள் உத்தர நக்ஷத்திரத்தில் இந்தத்திருக்கல்யாணத்தை விதிப்படி புரிவித்துப் பெரும்பேறு பெற்றான்.

இந்தத் திருக்கல்யாண மகோத்சவத்தை வேதாகம விதிப்படி பிரபலமாய் நடத்தவேண்டுமென்று வேதவித்துக்களாகிய பிராமணர்களும், ஆகமநிபுணர்களாகிய ஆதிசைவர்களும் விரும்பியபடி, திருக்கைலாயபரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிகசுவாமிகள் கட்டளைப்பிரகாரம், காசிவாசியும், ஷை யாதீனத்துக் காறுபாறுமாகிய சுப்பிரமணிய சுவாமிகளால், சிவநேச ...ள சிலகனவான்களுடைய உதவியைக்கொண்டு, கலியப்தம் ...௮௪-ல்நிகழ்ந்த தாரண(வரு)முதல் வஸந்தோத்சவத்தின் ஐந்தாந் ...ருநாள் அம்பிகை தவமும், ஆறாந்திருநாள் உத்தர நக்ஷத்திரத்தில் திருக்கல்யாணமும், ஒன்பதாந்திருநாள் வரையினதாகிய மூன்றுநாளும் ஔபாஸனாதி கிரியைகளும், பத்தாந்திருநாள் விசாகத்தில் ஔதும்பரபூசை முதலியனவும் தீர்த்தமும், அன்றிரவில் வெள்ளிரதக் காட்சியும் சிறப்பாக நடத்தப்பட்டுவருகின்றன. இந்தத் திருக்கல்யாணத்துக்கு உதவிசெய்த கனவான்களுடைய பெயர்கள் பின்பு வெளிப்படுத்தப்படும்.

## அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

பூமேவு மனுகுலத்து மாந்தாதா வெனுங்குரிசில் புரையவிந்நாள்
தூமேவு மிடைமருத வாணருக்குத் திருமணத்தைச் சுருதியோடு
பாமேவு மாகமஞ்சொல் விதிப்படியே புரிவித்துப் பயன்பெற்றுய்ந்த
மாமேவு துறைசையிற்சுப் பிரமணிய முனிவர்பிரான்வாழ்கமன்னே.

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,